உதயன்

விலை ரூபா 7.00

சுடர்18 வள்ளுவர் ஆண்டு 2034 தை 17 வெள்ளிக்கிழமை (31-01-2003) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:66

★ தமிழ் - முஸ்லிம் சமூக ஒற்றுமை ★ போர்நிறுத்த மீறல் ★ இயக்கத்தில் சிறுவர் சேர்ப்பு

# அரசு - புலிகள் - கண்காணிப்புக் குழு தொடர்ந்து பேச்சு நடத்துவதற்கு முடிவு

## மட்டக்களப்பில் தனியாகக் கூடி கலந்துரையாடவும் இணக்கம்

மட்டக்களப்பு,ஜனவரி31

**தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கிடையேயான நலன்களில் எவ்வாறு இணக்கத்தை ஏற்படுத்துவது என்பது தொடர்பான ஒரு திட்டத்தை வரைய விடுதலைப் புலிகளினதும் முஸ்லிம் சமூகத்தினதும் பிரதிநிதிகள் மத்தியில் ஒரு தனியான கூட்டம் நடைபெறும்.**

**இக்கூட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தில் கூடும். பேர்லினில் நடைபெறும் அடுத்த சுற்று சமாதானப் பேச்சுக்களில் இக்கூட்டத்துக்கான திகதி நிர்ணயிக்கப்படும்.**

மட்டக்களப்பு, வவுணதீவு பிரதேச செயலக அலுவலகத்தில் நேற்று அரசு - விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுக்கு இடையே நடைபெற்ற கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

அரசுப் பிரதிநிதிகள் குழுவுக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோவும், விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் குழுவுக்கு கிழக்கு மாகாண சிறப்புத் தளபதி கேணல் கருணாவும் தலைமை வகித்தனர்.

இலங்கை கண்காணிப்புக் குழுவின் தலைவரான மேஜர் ஜெனரல் ரொண்ட் புருஹோவ்டே கூட்டத்துக்கு தலைமை வகித்தார்.

இரு தரப்பினருக்குமிடையிலான இக்கூட்டம் வெளிப்படையானதாகவும், மனந்திறந்ததாகவும் அமைந்ததெனக் கண்காணிப்புக் குழு விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. முஸ்லிம் தரப்புப் பிரச்சினைகள், ஆத்திரமூட்டல் நடவடிக்கைகள், சிறுவர் ஆள் திரட்டல் ஆகியவை குறித்து கூட்டத்தில் ஆராயப்பட்டது.

எதிர்வரும் பெப்ரவரி 7 ஆம், 8 ஆம் திகதிகளில் பேர்லினில் நடைபெறும் சமாதானப் பேச்சுக் கூட்டத்

(14ஆம் பக்கம் பார்க்க)

### கண்ணி ஒழிப்பு மாநாட்டுக்கு வந்த
## சர்வதேச பிரதிநிதிகள் வன்னிக்கு விஜயம்

கிளிநொச்சி,ஜன.31

கொழும்பில் நடைபெற்ற கண்ணிவெடி ஒழிப்புக்கான ஆசிய பசுபிக் பிராந்திய மாநாட்டில் பங்குபற்றிய சர்வதேச பிரதிநிதிகள் நேற்று கிளிநொச்சிக்கு விஜயம் செய்தனர். வன்னிப் பிராந்தியத்தில் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளை அவர்கள் நேற்று அங்கு பார்வையிட்டனர்.

கண்ணி அகற்றும் பணியில் ஈடுபட்டிருக்கும் மனித நேய கண்ணி அகற்றும் பிரிவின் பிரதிநிதிகளையும், வெடையா அமைப்பின் பிரதிநிதிகளையும் சந்தித்து அவர்களின் செயற்பாடுகள் தொடர்பாக சர்வதேசப் பிரதிநிதிகள் கேட்டறிந்தனர்.

மனித நேய கண்ணி அகற்றும் பிரிவினர் விரைவாக தமது பணிகளை மேற்கொண்டு வந்தபோதும் சர்வதேச தரத்திலான பாதுகாப்பு சாதனங்களை அவர்கள் பெறவில்லை. இதனால் பெரும் ஆபத்துக்கு மத்தியிலேயே தமது பணிகளை அவர்கள் மேற்கொள்கின்றனர் என்று தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதிகள் எடுத்துக் கூறினர்.

மனித நேய கண்ணி அகற்றும்

(14ஆம் பக்கம் பார்க்க)

## மனிதநேய கண்ணி அகற்றும் பிரிவு இங்கும் சேவைக்கு?

யாழ்ப்பாணம்,ஜன.31

குடாநாட்டில் கண்ணி அகற்றும் பணியில் ஈடுபடுமாறு மனிதநேய கண்ணி அகற்றும் அமைப்புக்கு அழைப்பு விடுக்கப்படவிருக்கின்றது.

யாழ்.செயலகத்தில் இன்று நடைபெறவுள்ள கூட்டம் ஒன்றில் இதற்கான அழைப்பு உத்தியோகபூர்வமாக விடுக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் நடந்த 'சிறான்' அமைப்பின் கூட்டம் ஒன்றில் குடாநாட்டில் கண்ணி அகற்றும் பணி சீராக இடம்பெறுவதில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இதன் காரணமாக மனிதநேய கண்ணி அகற்றும் அமைப்பை குடாநாட்டில் பணியில் ஈடுபட அழைக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது - என்று தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.செயலகத்தில் இன்று இடம்பெறும் கண்ணி அகற்றல் தொடர்பான கூட்டத்தில் மனிதநேய கண்ணி அகற்றும் அமைப்பின் பிரதிநிதிகளும் பங்கு

(14ஆம் பக்கம் பார்க்க)

## எல்லைக் கிராமங்களுக்கு பிரதமர் நாளை விஜயம்

கொழும்பு,ஜன.31

வடக்கு - கிழக்கில் எல்லைப் பிரதேசத்தில் மீளக்குடியமரும் மக்களின் பிரச்சினைகள் குறித்து நேரில் ஆராய்வதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாளை அப்பகுதிகளுக்கு விஜயம் ஒன்றை மேற்கொள்கின்றார்.

எல்லைப் பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்த சிங்கள மக்கள் பலர் தற்போது மீளக் குடியமர்ந்து வருகின்றனர். அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து பிரதமர் நேரில் ஆராய்ந்து, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கிறார்.

அங்குள்ள படைஅதிகாரிகள் அரச அதிகாரிகள் ஆகியோருடன பிரதமர் பேச்சுக்களை நடத்துவார். படைமுகாம்களுக்கு சென்று படையினருடனும் கலந்துரையாடுவார்.

(ஐ-3)

## ஜெனரல் சதீஸ் நம்பியார் ஞாயிறன்று வடக்குக்கு!

[illegible],ஜன.31

இந்தியாவின் ஓய்வுபெற்ற [illegible] இராணுவ அதிகாரி [illegible] ஜெனரல் சதீஸ் நம்பியார் அடுத்த ஓரிரு தினங்களில் இலங்கை வருகின்றார்.

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை அவர் யாழ்ப்பாணம் செல்கிறார். அங்கும் இராணுவத்தினரின் உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசங்களை அவர் நேரில் பார்வையிடுவார்.

உயர்பாதுகாப்பு பிரதேச விவகாரம் குறித்து யாழ்ப்பாணத்தில் இராணுவ அதிகாரிகளிடம் மட்டுமன்றி சிவிலியன் தலைவர்கள் சிலரிடமும் அவர் கருத்துக்களைக் கேட்டறிவார் எனத் தெரிகின்றது.

யாழ்குடாநாட்டில் சர்ச்சைக்குரியதாகியிருக்கும் உயர்பாதுகாப்புப் பிரதேசங்களை, அங்கு மக்கள் மீளக்குடியமர வழி செய்யும் விதத்தில் எவ்வாறு மாற்றியமைக்கலாம் என்பது குறித்து நிபுணத்துவ ஆலோசனை வழங்கும்படி ஜெனரல் நம்பியாரை இலங்கை அரசு கேட்டிருப்பது தெரிந்ததே.

இது தொடர்பாக நேரில் ஆராய்ந்து அறிக்கை தயாரிக்கவே சதீஸ் நம்பியார் ஞாயிறன்று யாழ்செல்கிறார். (ஐ)

### பிரதமருடனான சந்திப்புக் குறித்து
## டக்ளஸும் சித்தார்த்தனும் கூட்டாகத் தரும் விளக்கம்

யாழ்ப்பாணம்,ஜன.31

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவும் புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தனும் நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை நாடாளுமன்றக் கூட்டத்தில் சந்தித்து பேசியது குறித்து நேற்றைய உதயனில் செய்தி வெளியாகியிருந்தது.

அதையொட்டி ஈ.பி.டி.பியிடமிருந்து அறிக்கை ஒன்று கிடைக்கப் பெற்றது. அதில் அதன் தகவல் தொடர்புச் செயலாளர் குறிப்பிட்டிருப்பதாவது:-

இந்தப் பேச்சுக்களின்போது வடக்கு - கிழக்கு மாகாணங்களில் உள்ளூ

(14ஆம் பக்கம் பார்க்க)



உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றச் செல்லும் இலங்கை அணியை, விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்சன் பெர்னான்டோ இலங்கை அணித் தலைவர் சனத் ஜெயசூரியாவுக்கு கைகொடுத்து அனுப்பிவைக்கும் காட்சி.

## இந்திய மீனவர்கள் காங்கேசனில் கைது!

யாழ்ப்பாணம்,ஜன.31

காங்கேசன்துறை கடற்பகுதிக்குள் ஊடுருவி மீன் பிடித்துக் கொண்டிருந்த பத்து இந்திய மீனவர்களை காங்கேசன்துறை கடற்படையினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

நாகப்பட்டினத்தைச் சேர்ந்த இந்த மீனவர்களையும் கடற்படையினர் காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

பொலிஸார் இவர்களை மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் முன்னிலையில் நேற்று ஆஜர் செய்த சமயம், அவர்களை அடுத்த மாதம் 13ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தர

(14ஆம் பக்கம் பார்க்க)

## மாநகரசபைக் கூட்ட அறிக்கையை தீயிட்டு கொளுத்தினார் உறுப்பினர்!

### வாக்குவாதம், கூச்சல், குழப்பத்தால் கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஜன்.31

நேற்று நடைபெற்ற யாழ்.மாநகர சபையின் மாதாந்த கூட்டத்தில் பெரும் அமளி துமளி ஏற்பட்டது. கடும் வாக்குவாதம் கூச்சல் குழப்பம் என்று அமைதி குலைந்து போனதால் கூட்டம் ஒரேயடியாக ஒத்திவைக்கப்பட்டது. கடந்த தடவை இடம்பெற்ற கூட்டத்தில் தான கொண்டு வந்து நிறைவேற்றிய தீர்மானம் கூட்ட அறிக்கையில் இடம்பெறாததால் ஆத்திரமடைந்த கூட்டணி உறுப்பினர் செல்லையா விஜயரட்ணம் சீறி எழுந்து சபைக் கூட்டத்தின நடுவே அந்த அறிக்கையை தீயிட்டுக் கொளுத்தினார். அவரது இந்தச் செயல் சபை உறுப்பினர்களின் கடும் கண்டனக் கணைகளுக்கு இலக்காகியது.

சபையிலிருந்து அவரை வெளியேற்றுமாறு எதிர்க்கட்சி மற்றும் ஆளும் கட்சி உறுப்பினர்கள் கூட்டாகக் குரல் எழுப்பினர். கடைசியில் தனது செயலுக்காக உறுப்பினர் செல்லையா விஜயரட்ணம் சபையோரிடம் பகிரங்க மன்னிப்புக் கோரினார்.

யாழ்மாநகரசபையில் பொறியியலா

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# தீர்வு ஏற்பட்டாலும் தமிழ் மக்களின் பாதுகாப்புக்கு தனிப்படை வேண்டும்!

## நாடாளுமன்ற விவாதத்தில் மாவை எம்.பி. வலியுறுத்தல்

கொழும்பு,ஜன.31

இனப்பிரச்சினைக்கு தீர்வு ஏற்பட்டாலும் தமிழ் மக்களின் பாதுகாப்பிற்கென தனியான ஒரு படை இருந்தே தீர வேண்டும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா நேற்று நாடாளுமன்றத்தில் வலியுறுத்தினார்.

ஒஸ்லோ சமாதான ஆதரவு மாநாடு தொடர்பாக பிரதமர் முன்னர் விடுத்த அறிக்கை மீதான ஒத்திவைப்பு விவாதத்தின்போது மாவை சேனாதிராஜா உரையாற்றினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

தமிழ் மக்கள் தமது அடிப்படை உரிமைகளைக் கேட்டபோது முழு இராணுவ பலத்தையும் கொண்டு அம் மக்களை அடக்கி ஆளவும், அழித்து ஒழிக்கவும் முற்பட்டனர்.



இப்போரின் மூலம் வெற்றிபெற முடிந்ததா என்பதை திரும்பிப் பார்க்க வேண்டும்.

தமிழர்களுக்கு எதிரான போராட்டம் நாட்டை இரண்டாக்கி விட்டது. படையினர் வசம் ஒரு பகுதியும், புலிகளின் வசம் ஒரு பகுதியும் இருக்கின்றன.

இந்த நிலை தொடர வேண்டுமா?

இன்றைய பிரதமர் நாட்டு மக்களின் ஆணையின் பேரிலேயே சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தார். இன்று அமைதி நிலவுகின்றது. அந்த அமைதியை எதிர்க்கட்சியினால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. சமாதானப் பேச்சைக் குழப்பப் பார்க்கின்றனர்.

ஜே.வி.பியினர் யுத்தத்தின் மூலம் புலிகளை அழித்து ஒழிக்க வேண்டும் என்கின்றனர். 1971 ஆம் ஆண்டில் ஆயுதப் புரட்சியின் மூலம் முழு இலங்கையிலும் ஆட்சி அதிகாரத்தைப் பிடிக்க ஜே.வி.பியினர் போராட்டத்தை ஆரம்பித்து மூக்குடைபட்டனர். ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகள் இப்படி சின்னத்தனமாக போராட்டத்தைத் தொடுக்கவில்லை.

சமஷ்டி ஆட்சி யோசனை ஒன்றும் புதிய விடயம் அல்ல. 50 ஆண்டுகளுக்கு முன்னரே அது முன்வைகக்கப்பட்டது. ஐம்பது ஆண்டுகளின் பின்னராவது சமஷ்டி முறையை இப்போது ஏற்றுக்கொண்டிருப்பது மகிழ்ச்சியைத் தருகின்றது.

சிங்கள இராணுவத்தை நம்ப நாம் தயாராக இல்லை. இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்பட்டாலும் எமது பாதுகாப்பிற்காக தனியான ஒரு படை இருந்தே ஆகவேண்டும்.

சமாதானப் பேச்சுக்களை முறியடிக்கும் நோக்குடனேயே ஜனாதிபதி ஜே.வி.பியினருடன் கூட்டமைத்து அரசைக் கவிழ்க்க முனைகின்றார். அவருடைய நோக்கம் நிறைவேறாது.

- இவ்வாறு அவர் கூறினார்.

### அமைச்சர் அஷ்ரப் விமான விபத்து:

# மகன், மனைவி, தாயாருக்கு மொத்தம் 80 லட்சம் ரூபா நஷ்டஈடு

கொழும்பு,ஜன.31

விமான விபத்தில் கொல்லப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான எம்.எச்.எம். அஷ்ரப்புக்கான நஷ்டஈடாக 80 லட்சம் ரூபா வழங்கப்படும். நேற்றுமுன்தினம் கூடிய அமைச்சரவை இதற்கான தீர்மானத்தை மேற்கொண்டது.

இந்த நஷ்டஈட்டுத் தொகையில் 50 லட்சம் ரூபா அஷ்ரப்பின் புதல்வருக்கும், 20 லட்சம் ரூபா மனைவிக்கும், 10 லட்சம் ரூபா தாயாருக்கும் வழங்கப்பட வேண்டுமென ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அஷ்ரப்பின் குடும்பத்தினருக்கு இவ்வாறு நஷ்டஈடு செலுத்துவதாயின் அந்த விமான விபத்தில் கொல்லப்பட்ட ஏனையோருக்கும் நஷ்டஈடு செலுத்தப்படவேண்டுமென சில அமைச்சர்கள் சுட்டிக்காட்டியிருக்கின்றனர். அதையடுத்து அஷ்ரப்பின் தாயார் காலமாகி விட்டார் என்பதால் அவருக்கு நஷ்டஈட்டுப் பணத்தை வழங்காது அப்பணத்தை விபத்தில் கொல்லப்பட்டோருக்காக வழங்குவதென தீர்மானிக்கப்பட்டது. (ஐ)

# வீரவேங்கையின் வித்துடல் கோப்பாயில் நேற்று விதைப்பு


கோப்பாய்,ஜன.31

சுகவனம் காரணமாக சாவடைந்த வீரவேங்கை இளங்கீரனின் (செல்வராசா மகாநந்தன் - கைதடி கிழக்கு) வித்துடல் நேற்று முன்னிரவு இறுதி அஞ்சலிக்குப் பின் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

முன்னதாக அஞ்சலிக்கூட்டம் நேற்று மாலை 4.00 மணிமுதல் கைதடி விக்னேஸ்வரா பாடசாலையில நடைபெற்றது. வீரவேங்கையின் தாயார் ஈகச்சுடர் ஏற்றி கூட்டத்தை ஆரம்பித்து வைத்தார். யாழ்மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செம்பணன் பொதுச்சுடரை ஏற்றினார். சாள்ஸ் அன்ரனி படையணி தளபதி அமுதாப் நினைவுரை வழங்கினார்.

அங்கிருந்து வித்துடல் ஊர்வலமாக கோப்பாய் மாவீரர் துயிலும் இலலத்துக்கு எடுத்து வரப்பட்டது. பெரும் எண்ணிக்கையானோர் இறுதி அஞ்சலி செலுத்தினர். (ஐ-72)





தென்னிலங்கையிலிருந்து வருகை தந்த பெரும் எண்ணிக்கையான பௌத்த பிக்குமார் பங்குகொண்ட கூட்டுப்பிரார்த்தனை நேற்று மாலை யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்றது.

பிரார்த்தனையில் கலந்துகொண்ட பிக்குமாரையும் ஏனைய மதத் தலைவர்களையும் படங்களில் காணலாம். *(படங்கள்: பா.கண்ணன்)*

### உளவு விமானத்தை புலிகளே சுட்டனராம்!

கொழும்பு,ஜன.31

அளவெட்டியில் விமானப் படைக்குச் சொந்தமான உளவு விமானத்தை விடுதலைப் புலிகளே சுட்டு வீழ்த்தினர்.

ஜே.வி.பி. பிரசார செயலாளர் விமல் வீரவன்ச நேற்று நாடாளுமன்றத்தில் இப்படித் தெரிவித்தார்.

சிங்கள பௌத்தர்களுக்கு துரோகம் செய்யும் ரணிலின் ஆட்சியை அழித்து ஒழிக்க வேண்டும் - என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

### ஆஸ்பத்திரிக்கு மருந்து வந்தது

அரியாலை,ஜன.31

யாழ்போதனா வைத்தியசாலைக்கு கொழும்பில் இருந்து ஒரு தொகுதி மருந்து வகைகள் நேற்று எடுத்து வரப்பட்டன.

மூன்று வாகனங்களில் ஏ-9 தரைப் பாதையூடாக இந்த மருந்து வகைகள் எடுத்துவரப்பட்டன.

வைத்தியசாலையில் சில முக்கிய மருந்து வகைகளுக்கு கடந்த சில நாள்களாக தட்டுப்பாடு நிலவி வந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ-17)

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.31

1992ஆம் ஆண்டு போட்டிப் பரீட்சை மூலம் பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் பெற்றவர்களுக்கான விசேட கலந்துரையாடல் நாளை சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

பயிலுநர் ஆசிரியர்களின் நிரந்தர நியமன திகதி மாற்றம் தொடர்பான மகஜரில் தனித்தனியாக கையொப்பம் இடவேண்டியுள்ளதால் சகலரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கேட்டிருக்கின்றனர். (ஐ-3)





யாழ்.இந்துக்கல்லூரி நாவலர் சிலையை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி திறந்து வைப்பதையும், கல்லூரி அதிபர் சிறிக்குமரன் சிலைக்கு மாலை அணிவிப்பதையும் படங்களில் காணலாம். *(படம்:தேவராஜன்)*

# கல்வி வளர்ச்சிக்கு உதவுபவர்களுக்கு மதிப்பளித்து வாழப் பழகுங்கள்!

## நாவலர்சிலை திறப்புவிழாவில் சிவத்தமிழ்ச் செல்வி

யாழ்ப்பாணம்,ஜன.31

கல்வி முன்னேற்றத்துக்கு உதவுபவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு மதிப்பளித்து நடக்க வேண்டிய பொறுப்பு மணவர்களுக்கு உண்டு. எனவே, அத்தகையவர்களை மாணவர்கள் உதாசீனம் செய்யக்கூடாது.

- இவ்வாறு நேற்று யாழ்.இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டப முன்றிலில் நடைபெற்ற நாவலர் சிலை திறப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

ஆசிரியர்கள், சமூக சேவையாளர்கள், மதப்பெரியார்கள் ஆகியோருக்கு மதிப்பளிக்க வேண்டிய கடமை மாணவர்களுக்கு உண்டு. ஆனால் இத்தகைய பண்பு இன்றைய மாணவர் சமூகத்தின் மத்தியில் குறைந்து செல்கின்றமை வேதனைக்குரிய விடயமாகும்.

யாழ்.இந்துக் கல்லூரி முன்றிலில இன்று நாவலர் சிலை திறந்து வைப்பதையிட்டு நான் பெருமையடைகின்றேன். இன்றைய நாளை இந்துக்கல்லூரியின் முக்கிய நாள்களில் ஒன்றாகக் கருதவேண்டும். மேற்படி கல்லூரி மாணவர்கள் தாம் பரீட்சையில் திறமையாகச் சித்தியெய்தி விட்டோம் என்று பெருமைப்படுவதைவிட கல்லூரி முன்றிலில் நாவலர் சிலை ஒன்றை அமைத்துள்ளோம் என்று எண்ணிப் பெருமைப்படுவது மேல் - என்றார்.

முன்னதாக - நாவலர் சிலையை சிவத்தமிழ்ச்செல்வி திரைநீக்கம் செய்து திறந்து வைத்தார். இந்துக் கல்லூரி அதிபர் சிறிக்குமரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் கல்லூரி ஆசிரியர்கள், பழையமாணவர்கள், மாணவர்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (எ-8)

### பொ.ஐ.மு. எம்.பிக்களின் இருநாள் கருத்தரங்கின் பின்

# சமஷ்டி முறை செயற்பாடு குறித்த ஜனாதிபதியின் நிலைப்பாடு அறிவிப்பு

கொழும்பு,ஜன.31

சமஷ்டி ஆட்சிமுறையைச் செயற்படுத்துவது தொடர்பான ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நிலைப்பாடு விரைவில் அறிவிக்கப்படும். சமஷ்டி ஆட்சிமுறை குறித்து பொ.ஐ.முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு விளக்க இரண்டு நாள் கருத்தரங்கொன்றை நடத்திய பின்னர் ஜனாதிபதி அது பற்றிய நிலைப்பாட்டை அறிவிப்பார்.

கடந்த செவ்வாயன்று நடைபெற்ற பொ.ஐ.முன்னணி நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் ஜனாதிபதி மாளிகையில் நாடாளுமன்றக் குழுக் கூட்டம் சுமார் இரண்டரை மணிநேரம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பேராசிரியர் விஸ்வ வர்ணபால சமஷ்டி ஆட்சிமுறை குறித்து ஒருமணி நேரமாக விளக்க உரையாற்றினார். இதனையடுத்து, சமஷ்டி ஆட்சிமுறை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கருத்தை வெளியிட சந்தர்ப்பம் வழங்குவதற்காக இரண்டு நாள் கருத்தரங்கொன்று நடத்தப்பட வேண்டுமென ஜனாதிபதி சந்திரிகா யோசனை தெரிவித்திருக்கிறார்.

இக்கருத்தரங்கின் பின்னர் சமஷ்டி முறையைச் செயற்படுத்துவது தொடர்பான தனது தீர்மானத்தை அறிவிப்பதாக ஜனாதிபதி அங்கு கூறினார் எனத் தெரிகிறது.

இதற்கிடையே கட்சித் தலைவர்களின் கூட்டங்களில் சுதந்திரக் கட்சியின் சார்பில் இதுவரை கலந்து கொண்ட காலி மாவட்ட எம்.பி.ரிச்சட் பத்திரனவுக்குப் பதிலாக அக்கூட்டங்களில் சு.க.சார்பில் அனுரா பண்டாரநாயக்கா கலந்துகொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-12)

### திரைப்படங்கள் கொள்வனவு செய்வோருக்கு!

யாழ்ப்பாணம்,ஜன.31

யாழ்.மாவட்டத்துக்குள் புதிய திரைப்படங்கள் மற்றும் கட்டண முறையில் புதிய திரைப்படங்களை கொள்வனவு செய்ய விரும்புபவர்கள பலாலி வீதியில் 249 ஆம் இலக்கத்தில் உள்ள திரைப்பட வழங்குநர் கூட்டுறவுச் சங்கத்தில் பதிவுகளை மேற்கொண்டு கொள்வனவுகளை செய்தல் வேண்டும் என்று யாழ்.மாவட்ட திரைப்பட வழங்குநர் கூட்டுறவுச் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (ஐ-3)



ஆஸ்திரேலியாவில் கடும் வெப்பம் நிலவுகிறது. தலைநகர் சிட்னியில் தற்போது வெப்பநிலை 43 டிகிறி செல்சியஸாக இருக்கிறது. வெப்பத்தில் இருந்து தப்ப ஆஸ்திரேலியர்கள் நீர்நிலைகளையும் கடலையும் நாடுகின்றனர். அவ்வாறு கடலில் பாயும் இளைஞர்கள் சிலரே இவர்கள்.

## சீனாவில் வெடி விபத்து

சீனாவில் பொதுமக்கள் வசிக்கும் குடியிருப்பு வளாகக் கட்டடத்தில் திங்கட்கிழமை ஏற்பட்ட வெடி விபத்தில் 14 பேர் உயிரிழந்தனர்.

இச்சம்பவம் ஹூண்டாங் மாகாணத்திலுள்ள ஜங்கியு என்ற இடத்தில் நிகழ்ந்தது. இந்த வெடிவிபத்துக்கு எரிவாயு கசிவே காரணம் என்று முதற்கட்ட விசாரணையிலிருந்து தெரிய வந்துள்ளது.

வெடிவிபத்து காரணமாக குடியிருப்புக் கட்டடம் நொறுங்கி விழுந்தது. இடிபாடுகளில் சிக்கி 14 பேர் உயிரிழந்தனர்; மூவர் படுகாயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இடிபாடுகளில் சிக்கிய 5 பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். காணாமற்போன 7 பேர் இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. (ம)

## இந்திய அழகிகளுக்கு பங்களாதேஷில் தடை

டாக்கா,ஜன.31

பங்களாதேஷில் இந்திய அழகிகளுக்குத் திடீர்த் தடை விதிக்கப்பட்டது.

பங்களாதேஷ் தலைநகரான டாக்காவில் உள்ள ஹோட்டல் ஒன்றில் சர்வதேச அளவிலான கண்காட்சி நடைபெறுவதாக இருந்தது. இதில் கலந்துகொள்வதற்காக இந்தியாவில் இருந்து 10 மொடல் அழகிகள் டாக்கா விமான நிலையத்தில் வந்து இறங்கியதும் மொடல் அழகிகள் ஹோட்டலுக்குச் செல்ல அனுமதிக்கப்படாமல் தடுத்துநிறுத்தப்பட்டனர். பின்னர் நடைபெறவிருந்த இந்த கண்காட்சி ரத்துச் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து மொடல் அழகிகள் 10 பேரும் இந்தியா திரும்பினார்கள். கடந்த சில நாள்களுக்கு முன்பு இந்தியாவில் இருந்து சென்ற பெண்கள் கால்பந்து அணியினரும் இதேபோல் பங்களாதேஷில் இருந்து திருப்பியனுப்பப்பட்டனர்.

பங்களாதேஷைச் சேர்ந்த புதாஹி ஜனதாபூ என்ற அமைப்பினர், பெண்கள் கால்பந்து ஆடுவது கண்ணியக் குறைவானது, ஆபாசமானது என்று கூறி மிரட்டல் விடுத்ததைத் தொடர்ந்து மேற்கு வங்காளத்தில் இருந்து சென்ற அந்தக் கால்பந்து அணியினர் 3 ஆவது போட்டியில் கலந்துகொள்ளாமல் திரும்பினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## ஐவரில் ஒருவருக்கு தென்கொரியாவில் கிம் என்று பெயர்

சியோல்,ஜன.31

தென்கொரியாவில் 'கிம்' என்ற பெயர் அந்த நாட்டு மக்களில் ஐவரில் ஒருவருக்கு இருக்கிறது. மொத்த மக்கள் தொகையில் 21.6 சதவீதம் பேர் தங்கள் குடும்பப் பெயராக கிம் என்ற பெயரைக் கொண்டுள்ளனர்.

மொத்தம் 99 லட்சம் பேருக்கு கிம் என்ற பெயர் உள்ளது.

கிம், லீ, பார்க் என்ற பெயர்கள் தான் அங்கு பரவலாக உள்ளன. மொத்தம் உள்ள 4 கோடியே 70 லட்சம் பேரில் 2 கோடிப் பேர் இந்த 3 பெயர்களில் ஒன்றை உடையவர்கள்.

2ஆவது இடத்தில் லீ என்ற பெயர் உள்ளது. 14.8 சதவீதம் பேர் லீ என்ற பெயரைப் பயன்படுத்துகிறார்கள். பார்க் என்ற பெயர் 3ஆவது இடத்தில் உள்ளது. 8.5 சதவீதம் பேருக்கு பார்க் என்ற பெயர் உள்ளது.

ஜப்பானின் ஆக்கிரமிப்பில் தென்கொரியா இருந்தபோது, கீழ்த்தட்டு மக்கள் குடும்பப் பெயர் வைத்துக் கொள்ளாமல் இருந்தனர். மக்கள் தொகைக் கணக்கு எடுத்தபோது ஜப்பான் நிர்வாகம் குடும்பப் பெயரைக் குறிப்பிடுவதைக் கட்டாயமாக்கியது. இதனால், கீழ்த்தட்டு மக்கள், மேல்தட்டு மக்களின் குடும்பப் பெயர்களைத் தங்களின் குடும்பப் பெயர்களாக எடுத்துக்கொண்டனர். (ம)

# ஈராக் மீது போர் தொடுப்பதற்கு 8 ஐரோப்பிய நாடுகள் ஆதரவு

லண்டன்,ஜன.31

ஈராக்மீது போர் தொடுப்பது என்ற அமெரிக்காவின் நிலைப்பாட்டினை 8 ஐரோப்பிய நாடுகள் ஆதரித்துள்ளன. அந்த நாடுகளின் தலைவர்கள் இணைந்து இது தொடர்பாகக் கூட்டறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளனர். ஸ்பெயின், போர்த்துக்கல், இத்தாலி, பிரிட்டன், செக் குடியரசு, ஹங்கேரி, போலன்ட், டென்மார்க் ஆகிய நாடுகளின் தலைவர்களே அமெரிக்க நிலைப்பாட்டை ஆதரித்துள்ளனர்.

ஐரோப்பாவின் பெரிய நாடுகளான பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி, ஈராக் விடயம் தொடர்பாக எடுத்துள்ள நிலைப்பாட்டுக்கு இந்த 8 நாடுகளதும் நிலைப்பாடு முற்றிலும் மாறானதாக அமைந்துள்ளது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் ஆதரவு இன்றியே ஈராக்மீது தாக்குதல் நடத்துவதற்கான ஏற்பாடுகளை தான் மேற்கொள்வதாக கடந்த சில தினங்களாக அமெரிக்கா தெரிவித்து வந்துள்ளது. இந்தநிலையில், இந்த நாடுகள் தமது ஆதரவை அமெரிக்காவுக்குத் தெரிவித்துள்ளன.



அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ்



ஐ.நாவுக்கான ஸ்பெயின தூதர்



பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயர்

அமெரிக்க அதிபர் புஷ்ஷும் பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளயரும் நேரில் சந்தித்து ஈராக் பிரச்சினை தொடர்பாகப் பேசுவதற்கு ஒருநாள் முன்பாக இந்தக் கூட்டறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இன்று அவர்கள் இருவரும் சந்தித்துப் பேசுகின்றனர்.

இந்த 8 நாடுகளும் அமெரிக்காவுக்கு ஆதரவு தெரிவித்திருப்பதால் ஈராக்குக்கு எதிரான போரில் இவை கூட்டணியாகச் செயற்படும் என்று சில அவதானிகள் கருதுகின்றனர். ஏனெனில், ஐரோப்பிய நாடுகளின் கூட்டறிக்கையில் "உலகின் பாதுகாப்புக்கு சதாம் ஹூசைன் தெளிவான அச்சுறுத்தல்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், ஐரோப்பாவின் முக்கிய நாடுகளான பிரான்ஸும் ஜேர்மனியும் ஈராக்குக்கு எதிரான போரை கடுமையாக எதிர்க்கின்றன. அவற்றையும் தம் பக்கம் திரும்ப அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் முயன்று வருகிறார். (ம)

## விண்வெளி வீரர்கள் அஞ்சலி

அமெரிக்கா பறக்கவிட்ட கொலம்பியா விண்கலத்தில் இருக்கும் விண்வெளி வீரர்களும் கேப்கானவரால் நகரிலுள்ள கட்டுப்பாட்டு அதிகாரிகளும் 17 ஆண்டுகளுக்கு முன்பு உயிர் நீத்த விண்வெளி வீரர்கள் நினைவாக ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர்.

1985ஆம் ஆண்டு சேலஞ்சர் விண்கலம் கேப்கானவரால் நகர்மீது வெடித்துச் சிதறியபோது அதில் இருந்த 7 விண்வெளி வீரர்கள் பலியானார்கள். (ம)

## இரசாயன நிலையத்தில் தீ
## அமெரிக்காவில் சம்பவம்
## 2பேர் பலி; மூவரைக் காணோம்



வெடி விபத்துக்கு உள்ளான இரசாயன நிலையத்தில் இருந்து எழுந்த புகைமூட்டம் பல மைல்களுக்கு அப்பாலும் தெரிந்தது. நிலையத்தில் இருந்து புகைமூட்டம் மேலெழுந்து செல்வதை படத்தில் காணலாம்.

நியூயோர்க்,ஜன.31

அமெரிக்காவின் வட கரோலினாவில் உள்ள இரசாயன நிலையம் ஒன்றில் ஏற்பட்ட வெடிவிபத்தில் இருவர் கொல்லப்பட்டனர். மேலும் மூவர் காணாமற்போயினர்.

இந்த நிலையம் மருந்து ஏற்றும் ஊசிகளுக்கான ஸ்ரிஞ்களை தயாரிக்கிறது. பிளாஸ்டிக் மருந்துவப் பொருள்களையும் விநியோகித்து வருகின்றது. புதனன்று இந்த நிலையத்தில் வெடிவிபத்து ஏற்பட்டது.

விபத்தில் காயமடைந்த ஐவர் எரிகாயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பிற கவுன்டி ஆஸ்பத்திரி பெண் பேச்சாளர் தெரிவித்தார். இவர்கள் தவிர மேலும் 11 பேர் லீனோர் மெமோறியல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் ஐவரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளது.

'வெடிவிபத்தால் தீப்பற்றி எரிந்த நிலையத்தில் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர மீட்புப் பணியாளர்கள் கடும் முயற்சி மேற்கொண்டு வருகின்றனர். "தீ முழுக் கட்டடத்தையுமே தின்றுவிட்டது. அதன் எந்தப் பகுதியாவது பாதுகாப்பாக இருக்கும் என்று நான் கருதவில்லை" - என்றார் சம்பவத்தை நேரில் பார்த்த ஒருவர். கட்டடத்தில் இருந்து எழும் தீச் சுவாலை 30 மைல்களுக்கு அப்பால் தெரிகின்றது.

நிலையத்தின் அருகில் இருந்த பாடசாலைகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு அங்கிருந்தவர்கள் அகற்றப்பட்டுள்ளனர். (ம)

## மாரடைப்பின் அறிகுறியான புரதத்தை கண்டுபிடிக்க புதிய இரத்தப் பரிசோதனை

டெக்சாஸ்,ஜன.31

மாரடைப்பு அல்லது பக்கவாதத்தால் பாதிக்கப்படுவோரின் இரத்தத்தில் சிரு ரியாக்டிவ் புரொட்டீன் (சி.ஆர்.பி.) என்னும் புரதம் காணப்படும். இரத்தத்தில் அப்புரதம் இருக்கிறதா என்பதை முன்கூட்டியே கண்டுபிடிக்கக் கூடிய இரத்தப் பரிசோதனை முறை அமெரிக்காவில் பயன்பாட்டுக்கு வந்துள்ளது.

மாரடைப்பு மற்றும் பக்கவாதம் ஏற்படும் ஆபத்து உள்ளதா என்பதைக் கண்டுபிடிக்க, ஒருவரின் இரத்தத்தில் கொலஸ்ரோல் (கொழுப்பு) எவ்வளவு இருக்கிறது என்பதைக் கண்டறிய இரத்தப் பரிசோதனை செய்யும் முறை நடைமுறையில் உள்ளது. அதேபோல, சி.ஆர்.பி. புரதத்தைக் கண்டறியும் இரத்தப் பரிசோதனையைச் செய்து கொள்வதும் மிகவும் பயனுடையதாகும் என்று அமெரிக்க நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையம், அமெரிக்க இதய நலச் சங்கம் ஆகிய அமைப்புக்கள் கூறியுள்ளன.

இரத்தத்தில் சி.ஆர்.பி. புரதத்தின் அளவு அதிகமாக இருந்தால், இருதய நோய் ஏற்படும் ஆபத்து அதிகம். அதனால் திடீர்மரணம் ஏற்படக்கூடும். இரத்தக் குழாய் நோய்களும் ஏற்படும். சி.ஆர்.பி அதிகம் இருப்பது, இரத்தத்தில் ஏற்பட்டிருக்கும் அழற்சியின் அடையாளம். பல ஆய்வுகள் மூலம் இது கண்டறியப்பட்டுள்ளது.

அதிக இரத்த அழுத்தம், அதிக கொலஸ்ரோல், புகைப் பழக்கம் ஆகியவற்றுடன் இரத்தக் குழாய்ச் சுவர்களில் வீக்கமும் இருந்தால், கொழுப்புச் சத்தைக் குறைக்கும் மருந்துகள் நோயாளிக்குக் கொடுக்கப்படுகின்றன. ஒருவருக்கு இருதய நோய் அல்லது மாரடைப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்பதைக் கண்டறிய டாக்டர்களுக்குக் கிடைத்திருக்கும் மற்றொரு வழி, சி.ஆர்.பி. இரத்தப் பரிசோதனை. அமெரிக்காவில் லட்சக்கணக்கானோர் மாரடைப்பினால் பாதிக்கப்படுகின்றனர். அவர்களுக்கு சி.ஆர்.பி. இரத்தப் பரிசோதனை ஒரு வரப்பிரசாதமாகும் என்று கூறப்படுகின்றது. (ம)

## பழம்பெரும் நடிகை பண்டரிபாய் மரணம்



தமிழ் திரையுலக பிரமுகர்களான விஜயகாந், சத்தியராஜ், நெப்போலியன் உட்பட பலர் பண்டரிபாய்க்கு அஞ்சலி செலுத்துகின்றனர்

சென்னை,ஜன.31

பழம்பெரும் நடிகை பண்டரிபாய் (73) சென்னையில் கடந்த புதனன்று காலமானார். அவரது கண்கள் தானம் செய்யப்பட்டன.

1949இல் வெளிவந்த ஏ.வி.எம். நிறுவனத்தின் 'வாழ்க்கை' படம்மூலம் தமிழ்த் திரையுலகில் அறிமுகமானார். பராசக்தி, அந்த நாள், மன்னன் உட்பட 1,200 படங்களில் நடித்துள்ளார். தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஹிந்தி, துளுவம், கொங்கணி ஆகிய 7 மொழிப் படங்களில் நடித்த பெருமை இவருக்கு உண்டு. 1965ஆம் ஆண்டு கலைமாமணி விருதும் 1991இல் தமிழக அரசின் எம்.ஜி.ஆர். விருதும் பெற்றவர். கணவர் ராமராவ்(80), திரைப்படத் தயாரிப்பாளர். குருபிரசாத், விஜய்ஆனந்த் என இரு வளர்ப்பு மகன்கள் உள்ளனர். (ம)

# பாராட்டும் வாழ்த்தும்

ஊரோடு உறவாடி, உன்னதமான தங்கள் உழைப்பால் உயர்வுபெற்ற எம் உத்தம நண்பர்களான

**உயர்திரு. செல்லையா வைத்தியநாதன்,**
**உயர்திரு.மார்க்கண்டு இராமலிங்கம்,**
**உயர்திரு.கணபதிப்பிள்ளை திருநாவுக்கரசு**


ஆகியோர் தரம்1 (ஒன்று) கிராம உத்தியோகத்தர்களாக உயர்வு பெற்றமையை நாம் மனமகிழ்ச்சியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அவர்கள் தம்பணியில் இன்னும் பல உயர்வுகள் பெற்றுத் தொடர எல்லாம் வல்ல அருளானந்த பிள்ளையார் அருள்பாலிக்க வேண்டி நிற்கின்றோம்.

**V.S.P.** கொமினிக்கேசன், சி.பேரின்பநாயகம்.
*டாக்டர் சுப்பிரமணியம் வீதி,*
*கந்தரோடை, சுன்னாகம்.* (13884)

# எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 31 - 01 - 1964



உதிர்வு 30 - 01 - 1995

**அமரர் செல்வராசா ஞானசேகரம் (ஞானம்)**

*திதி:* 31.01.2003

காலனவன் காத்துநின்று - உன்
பூவுடலை பறிப்பதற்கு
புது வருடம் பார்த்தானோ - பூமியில்
நீ வாழ்வதைப் பொறுக்காமல் பிரித்தானோ
ரத்த பாசம் துடிக்குதடா - ஞானா!
நீ இல்லையடா
சோகம் எம்மை வாட்டுதடா - சொந்தம்
இங்கு தவிக்குதடா.

*வேம்படி வீதி,*
*வத்திராயன் வடக்கு, தாளையடி.*
*T.P.: 0777 - 162754*

பிரிவால் துயருறும்:
**குடும்பத்தினர்.**

(13888)

## பரிசளிப்பும் நிறுவுநர் தினமும்

சுழிபுரம்,ஜன.31

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தியாலய பரிசளிப்பு விழாவும், நிறுவுநர் தினமும், பவள விழாவின் கால்கோள் நிகழ்வும் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு பாடசாலை திறந்தவெளி அரங்கில் அதிபர் ச.கைலாசநாதன் தலைமையில் நடைபெறவுள்ளன.

அருளாசியுரையை ஸ்ரீ காயத்திரி காமகோடி பீடாதிபதி சுவாமி ஸ்ரீராஜ் குமார் வழங்குவார். முதன்மை விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் கலந்துகொள்வார். விசேட அதிதியாக யாழ்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வீ.ஆனந்தசங்கரியும் சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதனும் கலந்துகொள்வர்.(எ-28)

## பாதசாரிகள் சிரமம்

பண்டத்தரிப்புச் சந்தைக்கும் பண்டத்தரிப்பு சந்திக்கும் இடைப்பட்ட பிரதான வீதியில் வாய்க்கால் வெட்டிய மண் அகற்றப்படாது இருப்பதால், இவ்வீதி வழியாகப் பயணிக்கும் பொதுமக்களும் வாகனங்களும் பெரும் சிரமங்களை அனுபவித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மண் குவிக்கப்பட்டு இரண்டுமாத காலமாகியும் இன்னும் அது அகற்றப்படாதிருப்பது குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வெள்ளம் வழிந்தோடுவதற்கென வெட்டப்பட்ட இந்த வாய்க்கால் சிமெந்தினால் கட்டப்படாததினால் சேதமுறும் நிலையில் இருந்து வருகின்றது. (எ-135)

## காணாமற் போனோரின் உறவினர்களுக்கு தையல் இயந்திரங்கள்

காணாமற் போனோர் பாதுகாவலர் சங்க உறுப்பினர்கள் 44 பேருக்கு நேற்று முன்தினம் யாழ்.அரச அதிபர் தையல் இயந்திரங்களை வழங்கினார்.

சமூக சேவைகள் அமைச்சு இதற்கான நிதியினை ஒதுக்கீடு செய்திருந்ததாகவும் -

இதேபோன்று மேலும் பலருக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்படவுள்ளதாவும் - கூறப்பட்டது. (ஒ-9)

# இலக்கிய விருது வழங்கும் நிகழ்வு

'சிரித்திரன்' ஆசிரியர் அமரர் சிவஞானசுந்தரம் நினைவு விருதுகள் வழங்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளர் உடுவை எஸ்.தில்லைநடராஜா தலைமையில் இந்நிகழ்வை திருமதி கோகிலம்சுந்தா மங்கள விளக்கேற்றித் தொடக்கி வைப்பதுடன் சிறந்த சிறுகதைகளுக்கான விருதுகளைப் படைப்பாளிகளுக்கு வழங்குவார். (ஒ)

# சேவை நலன் பாராட்டும் பிரிவுபசாரமும்



## திரு. சி.தியாகராஜா

**B.Sc. Dip. in Ed.**

*(உதவிக் கல்விப் பணிப்பாளர் - கணிதம்)*

வடமராட்சி கல்வி வலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராகப் பணியாற்றி 2002.12.12இல் ஓய்வுபெற்ற எமது பேரன்புக்கும் பெருமதிப்புக்குமுரிய **திரு.சி. தியாகராஜா** அவர்களின் சேவை நலன் பாராட்டும் பிரிவுபசாரமும் 2003.02.03 திங்கள பி.ப.2.30 மணிக்கு யா/திரு இருதயக் கல்லூரி'யில் நடைபெறும். வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் கணித ஆசிரியர்கள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திரு.R.L.தேவராஜா *(உப அதிபர்)*
(13882) *யா/கம்பர்மலை அ.த.க. பாடசாலை(அமைப்புக் குழு சார்பாக).*

# மரண அறிவித்தல்

## சுப்பையா சிறிஸ்கந்தராசா (சிறி)

*(யாழ். மாநகரசபை முன்னாள் ஊழியர்)*

இல.64, ஈச்சமோட்டையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா சிறிஸ்கந்தராசா அவர்கள்(29.01.2003) புதன்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் சாவகச்சேரியைச் சேர்ந்த பொன்னையா - யோகமமாவின் மருமகனும் மற்றும் ஜேர்மனியைச் சேர்ந்த இந்திராதேவியின் பாசமிகு கணவரும் சிறிதேவன், சிறிதேவி, இராசதேவி, சிறிப்பிரியா, சிறிகரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும் திருமதி புஸ்பராணி (ஈச்சமோட்டை), சிவகுமாரன்(ஜேர்மனி), காலஞ்சென்ற பிரணவநாதன் ஆகியோரின் சகோதரனும் சண்முகவடிவேல்(மாஸ்ரர்), கௌசலாதேவி, தேவராசா, காலஞ்சென்ற ஜெயராசா மற்றும் துரைராசா(கனடா), சந்திரன் தேவி (கனடா), சாந்தா தேவி (ஆசிரியை - கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*இல.64, ஈச்சமோட்டை,*
*யாழ்ப்பாணம்.* (13885)

தகவல்:
சண்முகவடிவேல் புஸ்பராணி (சகோதரி)




தே.சே.வ. சமீபத்தில் தனது சாவகாச வங்கிச் சேவையை அறிமுகப்படுத்தியது.
வாடிக்கையாளர்கள் இப்போது வார இறுதி நாட்களிலும் தமது வங்கித் தேவைகளைக் கவனிக்கலாம். சனிக்கிழமைகளில் காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணிவரை கீழ்கண்ட கிளைகளும் சேமிப்பு கடைகளும் திறந்திருக்கும்:

34 கிளைகள்:
தலைமையகக் கிளை, அனுராதபுரம், குளியாப்பிட்டி, நீர்கொழும்பு, கம்பஹா, மட்டக்களப்பு, திருகோணமலை, கொட்டாஞ்சேனை, வவுனியா, வெள்ளவத்தை, சாவகச்சேரி, கடவத்தை, சுன்னாகம், கண்டி, பருத்தித்துறை, இரத்தினபுரி, யாழ்ப்பாணம், கேகாலை, குருணாகல், பத்திரமுல்லை, சிலாபம், பிலியந்தலை, களுத்துறை, மாத்தறை, காலி, அம்பலாங்கொடை, அக்குறஸ்ஸ, மொறட்டுவை, நுகேகொடை, தெஹிவளை, நாராஹேன்பிட்டி, கல்முனை, நகரக் கிளை, பொரளை.

7 சேமிப்புக்கடைகள்:
கிருலப்பனை, களுபோவிலை, பொரலஸ்கமுவ, மொறட்டுமுல்ல, நாவல, வெலிக்கடை, கோட்டை புகையிரத நிலையம்.

ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணிவரை திறந்திருக்கும் கிளைகளும் சேமிப்புக்கடையும்:

4 கிளைகள்
அம்பாறை, கிரிபத்கொடை, ஹோமாகம, மஹரகமை.

1 சேமிப்புக்கடை:
தெல்கந்தை.

சேவைகள்:
- சகல கணக்குகளிலும் பணவைப்பு, பணமீளப்பெறல்கள்.
- புதிய கணக்குகளை ஆரம்பித்தல்.
- பணவைப்புக்கு எதிராக கடன் பெறுதல்.

சங்கடமற்ற - சந்தோஷம் தரும் சாவகாச வங்கிச் சேவை.

NSB
உங்கள் குடும்ப சேமிப்பு வங்கி

LOWE LDB

**உதயன்**

## உள்ளூராட்சி சபைகளை காலாவதியாக விடுக!

யாழ்.மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் அடுத்த பத்துத் தினங்களில் காலாவதியாகின்றது.

மூன்று வருட கால நிர்வாகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட இச்சபைகள் ஏற்கனவே அதற்கு மேல் ஒரு வருடம் காலநீடிப்புப் பெற்று இயங்கியுள்ளன. இந்தச் சபைகளின் ஆயுளை மேலும் ஒரு வருடத்துக்கு நீடிக்கும்படி சில தமிழ்த் தலைவர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துக் கோரியதாகத் தகவல் வெளியாகியிருக்கின்றது!

"சோழியன் குடுமி சும்மா ஆடாது." இது விடயத்தில் இரு இயக்கக் கூட்டும் கூட காரணகாரியத்துடன்தான்!

1998இல் இச்சபைகளுக்கான தேர்தல்கள் நடந்த சூழ்நிலையும், முறையும் முற்றிலும் வேறுபட்டவை. குளறுபடிகளின் உச்சத்தில் - மக்கள் பிரதிநிதித்துவம் என்ற உயர்ந்த ஸ்தானத்தை - குறுக்கு வழியில் எட்டிப்பிடித்தவர்களுக்கு, அதைவிட்டு இறங்க ஆசைவிடுவதாய் இல்லை. பதவிச் சுகங்களும் வேறு வசதிகளும் அக்கதிரைகளைக் கட்டிப்பிடித்து வைத்துக்கொள்ளத் தூண்டுகின்றன.

கடந்த பொதுத்தேர்தல்கூட முற்றாகச் சீராக நடத்தப்பட்டது என்று கூறமுடியாது. ஆனால், 1998இல் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்குளறுபடிகள், தில்லுமுல்லுகளோடு ஒப்பிடுகையில் அது ஓரளவுக்கு முன்னேற்றகரமாக இருந்தது.

குறுக்குவழி நடவடிக்கைகள், கள்ளவாக்குக் குவிப்பு போன்ற சுத்துமாத்து வழிகளை பழைய அளவில் நாடியும்கூட, இந்தச் சக்திகளால் கடந்த பொதுத் தேர்தலில் - முன்னைய தேர்தல்கள் போல - ஆசனங்களைக் கைப்பற்றமுடியவில்லை. அவை மக்களால் அடியோடு நிராகரிக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்டன.

தற்போதைய சமாதானப் பேச்சுக்கள் ஓர் இக்கட்டில் சிக்கிநிற்கின்றன. இந்நிலையில் இந்த உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் காலாவதியானால், அதற்குப் பின்னர் உடனடியாக அவற்றுக்குத் தேர்தல் நடத்தப்படுமா என்பது கேள்விக்குறியே. அப்படித் தேர்தல் நடத்தப்பட்டாலும் முன்னைய உள்ளூராட்சித் தேர்தல்களில் பண்ணிய 'திருவிளையாடல்களை' இந்தத் தேர்தலில் நடத்த முடியாது. கடந்த பொதுத்தேர்தலில் கிடைத்ததைவிட படுமோசமான தோல்விகளை எதிர்கொள்ளவேண்டி வரலாம். இப்படித்தான் ஆட்சிக் கதிரையில் ருசி கண்டவர்கள் - காண்பவர்கள் - கருதுகின்றார்கள். அதனால்தான் தேர்தலை எதிர்கொள்ளாமல், பதவிக் காலத்தை நீடித்து, பதவி சுகத்தைத் தொடர்ந்து அனுபவிக்க அவர்கள் முயல்கின்றார்கள்.

குறுக்கு வழியில் கிடைத்த உள்ளூராட்சி பதவி அந்தஸ்து வாகன, பாதுகாப்பு மற்றும் எடுபிடி வசதிகள், வாய்ப்புகள் போன்றவைதான் இவை போன்ற பல சக்திகளுக்கு அராஜகவழி செல்ல இடம்விட்டுக் கொடுக்கின்றன. இது குடாநாட்டு மக்கள் நேரில் கண்ட யதார்த்த நிலைமை.

எனவே, இச்சபைகளின் பதவிக் காலத்தை மேலும் நீடிக்காமல் காலாவதியாக விடுவதே பல தேவையற்ற சிக்கல்கள் உருவாகாமல் தவிர்க்க வழிவகுக்கும்.

மீண்டும் இச்சபைகளின் பதவிக் காலத்தை நீடித்து அவற்றுக்கு உயிரூட்டும் முயற்சியில் ரணிலின் அரசு ஈடுபடுமானால் அது தற்போதைய சமாதான முயற்சிகளிலும் பின்னடைவை ஏற்படுத்தக் கூடிய விளைவுகளை உருவாக்கிவிடலாம் என்பது கவனிக்கப்படவேண்டியது.

இச்சபைகளின் பதவிக்காலத்தை நீடிக்க முயல்வது, தற்போதைய சமாதான முயற்சிகளுக்குக் குந்தகம் விளைவிக்கக் கங்கணம் கட்டி நிற்போருக்கு அதிகம் உதவுவதாக அமையும் என்பதும் கவனிக்கத்தக்கது.

எனவே, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, தமது அமைச்சர் தி.மகேஸ்வரனுக்கு உறுதியளித்தபடி இந்தச் சபைகளின் பதவிக் காலத்தை காலாவதியாக விட்ட பின்னர், புதிய வேட்பு மனுக்களைக் கோரி அவற்றுக்கான தேர்தல்களை நடத்துவதே சாலச் சிறந்தது.

வடக்கு - கிழக்கு களநிலைமை குறித்தும் அரசுடன் புலிகள் பேச்சு நடத்தி வருவதால் இந்த விடயத்தில் முடிவெடுக்க முன்னர் புலிகளின் ஆலோசனையையும் அரசு உரியமுறையில் உள்வாங்கிக் கொள்வது நல்லது - தன்பாட்டில் முடிவெடுத்து சிக்கலில் மாட்டிக்கொள்வதை விட.

### உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக

# மீளக்குடியமர அனுமதி மறுக்கப்பட்ட மக்களுக்கு கொடுப்பனவு வழங்குக!

## புனர்வாழ்வு அமைச்சருக்கு கோரிக்கை மகஜர்

தென்மராட்சி,ஜன.31

உயர் பாதுகாப்பு வலயங்கள் காரணமாக மீளக்குடியமர முடியாதவர்களுக்கும் மீள்குடியமர்வுக்கான கொடுப்பனவு வழங்கப்படவேண்டும்:

- இவ்வாறு அகதிகள் புனர்வாழ்வு, மீள்குடியமர்வு அமைச்சிடம் மறவன்புலோ மற்றும் தனங்களப்பு விவசாயிகள் சார்பாக கோரப்பட்டுள்ளது.

இப்பிரதேச விவசாயச் சம்மேளனத் தலைவர் மா.லீலா வினோதன், அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தனவுக்கு அனுப்பிய மகஜரிலேயே இவ்வாறு கோரப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தென்மராட்சியில் மீளக்குடியமரும் அனைவருக்கும் 25 ஆயிரம் ரூபா உதவித் தொகை அரசினால் வழங்கப்படவுள்ளதாக எமக்குத் தெரியவருகிறது. இச்செய்தி எமக்கு மகிழ்ச்சி தருகிறது.

ஆனால், தனங்களப்பு மற்றும் மறவன்புலோ பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்த நாம் இப்போதும் அகதிகளாகவே உள்ளோம்.

ஏனெனில், எமது சொந்த இடங்களில் நாம் குடியமர அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. எமது சொந்த இடங்களான தனங்களப்பு மற்றும் மறவன்புலோ ஆகிய பகுதிகள் இப்போதும் அதி உயர் பாதுகாப்பு வலயங்களாகவே உள்ளதால் அங்கு நாம் மீளக்குடியமர அனுமதிக்கப்படவில்லை.

இதனால், எமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்து நிரந்தர தொழில்களில் ஈடுபடவோ, வருமானம் பெறவோமுடியாத நிலையில் உள்ளோம்.

மாதாந்தம் நிவாரண உதவிகளும் சீராக எமக்குத் தரப்படுவதில்லை. கடந்த 3ஆண்டுகளாகவே சொல்லமுடியாத துயரங்களை நாம் அனுபவித்துவருகிறோம்.

ஆகவே, மீளக்குடியமர்ந்தவர்களுக்கான கொடுப்பனவை எமக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றுள்ளது.

இந்த மகஜரின் பிரதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர், யாழ்.அரச அதிபர், தென்மராட்சி பிரதேச செயலர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

### மகளிர் தினத்தையொட்டி

## மாணவ, மாணவியர்களுக்கான நாடளாவிய கட்டுரைப் போட்டி

மண்டைதீவு,ஜன.31

எதிர்வரும் மார்ச் மாதம் 8ஆம் திகதி சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படவுள்ளது. இதனை முன்னிட்டு பாடசாலை மாணவ, மாணவியருக்கான கட்டுரைப் போட்டியொன்றை மகளிர் விவகார அமைச்சு நடத்துகிறது. இது தொடர்பாக பாடசாலைகளுக்கு அமைச்சு தெரியப்படுத்தியுள்ளதாவது:-

தரம் 10-11 மற்றும் தரம் 12-13 ஆகியவற்றைச் சேர்ந்த உயர் வகுப்பு மாணவ, மாணவியரே இப்போட்டியில் பங்கேற்க முடியும். போட்டியாளர் ஒருவர் சிங்களம் அல்லது தமிழ்மொழி மூலமான ஒரு கட்டுரையை மட்டுமே போட்டிக்குச் சமர்ப்பிக்க முடியும்.

எந்த ஒரு பாடசாலையும் ஆறு கட்டுரைகளை அனுப்பலாம். அக்கட்டுரைகள் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்டு பெப்ரவரி 15ஆம் திகதிக்கு முன்னர் மகளிர் விவகார அமைச்சின் செயலாளருக்கு கிடைக்குமாறு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

இப்போட்டியில் தேசிய மட்டப் பரிசுக்கு 20 கட்டுரைகளும் - மாவட்ட மட்டத்தில் 50 கட்டுரைகளும் - தேர்ந்தெடுக்கப்பட உள்ளன. (ஒ-88)

### வன்னியிலிருந்து திரும்பிவந்து

## மீளக்குடியமர்ந்த மக்களின் விவரங்களை திரட்டும் படையினர்

வன்னிப் பிரதேசத்தில் இருந்து ஏ-9 பாதை திறக்கப்பட்ட பின்னர் யாழ்.குடாநாட்டில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் விவரங்களை மீண்டும் படையினர் திரட்ட ஆரம்பித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்கும் இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து பாதுகாப்பு நடவடிக்கைகளிலும் மாற்றங்கள் செய்யப்பட்டன.

இராணுவ சிவில் அலுவலகங்களின் பணிகள் மட்டுப்படுத்தப்பட்டு குடும்பங்களைப் பதிவுசெய்யும் நடைமுறை மற்றும் விசேட அடையாள அட்டை வழங்கல், வெளி மாவட்டங்களுக்குச் செல்வதற்கான முன் அனுமதி பெறும்முறை என்பன நீக்கப்பட்டன.

இந்நிலைமையில் அண்மைக்காலமாக படையினர் கிராம அலுவலர்கள் மூலம் குடும்ப விவரங்களைச் சேகரிக்க முயற்சித்தனர். ஆயினும், அதில் பல்வேறு சிரமங்கள் ஏற்பட்டதாகக் கூறப்பட்டது. இதனைத் தொடர்ந்து பிரதேச செயலாளர் பிரிவு ரீதியாக தற்போது பிரதேச செயலர்கள் மூலம் தகவல்களைப் பெறும் நடவடிக்கைகளில் படையினர் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

- இதேவேளை வன்னியில் இருந்து வந்து குடாநாட்டில் மீளக் குடியமர்ந்துள்ள மக்கள் இந்தக் குடும்ப விவரம் திரட்டும் பணியால் பல்வேறு பய உணர்வுகளுடனும் காணப்படுகின்றனர். (ஒ-86)

# ஏ-9 வீதி திறக்கப்பட்டதை அடுத்து விவசாயத்துறையில் பெரும் வளர்ச்சி!

## யாழ். உதவிப் பணிப்பாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.31

விவசாய உற்பத்திகளை தென்னிலங்கையில் சந்தைப்படுத்துவதற்கான வாய்ப்பு ஏற்பட்டமை மற்றும் விவசாய விளைபொருள்களுக்கான கிராக்கி குடாநாட்டு விவசாயத் துறையில் கணிசமான வளர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன:

- இவ்வாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் எஸ்.சின்னத்துரை.

யாழ். - கண்டி வீதி திறக்கப்பட்டதையடுத்து, குடாநாட்டில் விவசாயத் துறையில் எத்தகைய வளர்ச்சிகள் ஏற்பட்டுள்ளன என வினவியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து விவசாயப் பணிப்பாளர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் யாழ். - கண்டி வீதி திறக்கப்பட்டதையடுத்து, குடாநாட்டின் விவசாய உற்பத்திகள் மற்றும் விளைபொருள்கள் என்பன லொறிகள்மூலம் கொழும்புக்கும், நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் அனுப்பிவைக்கப்பட்டு வருவதுடன், விவசாயிகள் தாமே அவற்றை எடுத்துச் சென்று சந்தைப்படுத்தியும் வருகின்றனர்.

குறிப்பாக பீற்றூட், கோவா, வெங்காயம் மற்றும் புகையிலை ஆகியவற்றை குடாநாட்டு விவசாயிகள் இம்முறை அதிகளவில் பயிரிட்டுள்ளனர். இவற்றுக்கு தென்னிலங்கையில் தற்பொழுது பெரும் கிராக்கியும் ஏற்பட்டுள்ளது.

விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான உரவகைகளையும், இயந்திரசாதனங்களையும் தரைப்பாதைமூலம் குடாநாட்டுக்கு எடுத்துவரக்கூடிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை - வாழை மற்றும் முந்திரிகை ஆகியனவும் குடாநாட்டில் தற்பொழுது அதிகளவில் செய்கை பண்ணப்பட்டு வருகிறது. இவற்றை தென்னிலங்கையில் சந்தைப்படுத்துவதன் மூலம் குடாநாட்டு விவசாயிகள் பெரும் வருமானத்தைப் பெறக்கூடிய நிலையும் ஏற்பட்டுள்ளது. (எ-10)

## நூலக சேவை விஸ்தரிப்பு

தென்மராட்சி,ஜன.31

சாவகச்சேரி நகரசபையின் பொது நூலகம் மற்றும் மீசாலை நுணாவில் ஆகிய கிளை நூலகங்கள் ஆகியவற்றில் நாளை சனிக்கிழமை தொடக்கம் அங்கத்தவர்களுக்கு புத்தகங்கள் இரவல் கொடுக்கும் பிரிவு செயற்படுமென நகரசபைச் செயலாளர் எம்.எஸ்.சரவணபவன் தெரிவித்தார்.

இந்த நூலகங்கள் மீள இயங்கத் தொடங்கிய போதிலும் இதுவரை புதினப் பத்திரிகைகள் பிரிவு மட்டுமே இயங்கிவந்துள்ளது.

கடந்த வருடம் தொடக்கம் சஞ்சிகைகள் பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

நூல்நிலைய இரவல் கொடுக்கும் பகுதிக்கென 20லட்சம் ரூபா பெறுமதியான புத்தகங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதை அடுத்து இரவல் கொடுக்கும் பிரிவுகள் செயற்படத் தொடங்குகின்றன. (ஒ-117)

**நாளை**

தை 18
சனிக்கிழமை
(01.02.2003)
திதி : அமாவாசை
பிற்பகல் 4.49 வரை.
நட்சத்திரம் : திருவோணம்
பின்னிரவு 2.10 வரை.
அமாவாசை விரதம்
சுபநேரம் : 3.36 - 5.06
ராகுகாலம் : 9.36 - 11.06
(பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

பெரும் செல்வங்களை விட நல்ல பெயரை தேடுவதே சிறந்ததாகும்.

## மாணவ தலைவர்களுக்கான இருநாள் வதிவிடச் செயலமர்வு

### அடுத்த மாதம் யாழ்ப்பாணத்தில்

குருநகர்,ஜன.31

பாடசாலைகளூடாக சமாதானத்தை முன்னெடுக்கும் நோக்குடன் அடுத்தமாதம் 8ஆம், 9ஆம் திகதிகளில் பாடசாலை மாணவத் தலைவர்கள் கலந்துகொள்ளவுள்ள இருநாள் வதிவிட செயலமர்வை நடத்த தேசிய ஒருமைப்பாட்டு செயற்றிட்டப் பணியகம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இது தொடர்பாக தேசிய ஒருமைப்பாட்டு செயற்றிட்டப் பணியகப் பணிப்பாளர் கலாநிதி திருமதி தகாரியவாசம் மேலதிகக் கல்விப் பணிப்பாளர் எஸ்மகாலிங்கத்துக்கு அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள இச்செயலமர்வில் கலந்துகொள்ளவுள்ளோரில் மாணவர்களுக்காக சென்.ஜோன்ஸ் கல்லூரியும், மாணவிகளுக்காக சுண்டிக்குளி மகளிர் கல்லூரியும் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாகவும் -

இச்செயலமர்வில் கலந்துகொள்ள உள்ளவர்களுக்கான உணவுவசதியை தேசிய ஒருமைப்பாட்டுச் செயற்றிட்டப் பணியகம் வழங்குமெனவும் - மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்செயலமர்வில் கலந்துகொள்ளவுள்ள பாடசாலைகளையும பங்குபற்றவுள்ள மாணவர்களின் எண்ணிக்கையையும் தெரியப்படுத்துமாறு செயற்றிட்டப் பணிப்பாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளரைக் கேட்டுள்ளார். (ஒ-51)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்

### கந்தையா பொன்னம்பலம் (B.A.)

(ஓய்வுபெற்ற வனத்திணைக்கள உத்தியோகத்தர்)

தோற்றம்: 16.04.1943 மறைவு: 11.02.2002

திதி: 31 - 01 - 2003

எம் குலவிளக்கை எப்பிறப்பிற்காண்போம் இனி?
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

உம் பிரிவினில் வாடும்:
மனைவி, மக்கள்.

'சாயி இல்லம்'
பண்ணாகம், சுழிபுரம். (13853)

## 2ஆம் வருட நீங்காத நினைவலைகள்

மலர்வு 10 - 06 - 1924



உதிர்வு 31 - 01 - 2001

### அமரர் குருசு பாவிலுப்பிள்ளை

(நேசத்துரை)

ஆண்டுகள் இரண்டு ஆயினும் ஆறவில்லை எம் துயரம்
எத்தனை சுற்றம் இருப்பினும் நித்தமும்
ஐயா என்றழைக்க இவ்வுலகில் நீங்கள் இல்லையே!
நெஞ்சம் மறக்குமா உங்கள் திருமுகத்தை?
பார் புகழ பல்கலை வளம் கொடுத்தீர் எமக்கு
ஞாலமெல்லாம் உங்கள் பெயரை நாம் நிலைநிறுத்துவோம்
காலமெல்லாம் உங்கள் நினைவால் கதறி அழுகின்றோம்
உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனை வேண்டுகின்றோம்..

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரன், பேர்த்தி, பூட்டி.

26, முதலாம் குறுக்குத்தெரு,
பாஷையூர்,
யாழ்ப்பாணம். (13865)

## ஒலிபரப்புச் சாதனங்கள் அன்பளிப்பு

தென்மராட்சி,ஜன.31

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் ஒலிபரப்புச் சாதனங்களை அன்பளிப்புச் செய்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை கல்லூரி அதிபர் இ.கயிலைநாதனிடம் அவர் இந்த ஒலிபரப்புச் சாதனங்களைக் கையளித்தார்.

இதேவேளை - சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி நூல் நிலையத்திற்கு புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்கும் இவர் நிதியுதவி வழங்கியுள்ளார்.(எ-117)

## கூட்டுறவுச் சங்க கிளை இடமாற்றம்

கூழாவடி தியாக சீலம் சிறுவர் பூங்காவுக்குச் சமீபமாக இயங்கிவந்த மானிப்பாய்ப் ப.நோ.கூ. சங்க 3ஆம் இலக்கக் கிளை தற்போது கூழாவடி உப தபாலகத்துக்கு சமீபமாகவுள்ள கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (எ-100)

## கிராமஅலுவலருக்கு பதவியுயர்வு

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பணிபுரியும் 5கிராம அலுவலர்கள் சிறப்புத்திறமை அடிப்படையில் தரம்II இல் இருந்து தரம்I இற்குப் பதவியுயர்வு பெற்றுள்ளனர்.

ந.நாகராசா, வை.சந்திரராசா, பி.யோகராசா, ஏ.சிவதாசன், எம்.தயானந்தன் ஆகியோரே இவ்வாறு பதவி உயர்வு பெற்றுள்ள கிராம அலுவலர்களாவர். (எ-100)


**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

காலம்: 01.02.2003 காலை 10 மணி.

அநேக மாணவரின் வேண்டுகோளுக்கிணங்க அனைத்து Diploma கற்கை நெறிக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.

மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்புகொள்ளவும்.

இயக்குநர்
IIS
யாழ்ப்பாணம். (C/26247)


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 29 - 05 - 1908



உதிர்வு 23 - 01 - 2001

### அமரர் வேலுப்பிள்ளை கணபதிப்பிள்ளை

(அராலி கிழக்கு)

திதி: 31-01-2003

அன்பின்அப்பாவே! எங்களை விட்டுப்
பிரிந்து ஆண்டுகள் இரண்டு
ஆகிவிட்டதே! நீங்கள்
மறைந்தாலும் உங்கள் நினைவுகள்
எங்கள் நெஞ்சங்களை விட்டு
என்றும் மறையாது.

எம் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல அராலி அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"கலாபவனம்"
வீரபத்திரர்கோவில் தெற்கு,
உடுப்பிட்டி. (13864)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 06 - 12 - 1928



உதிர்வு 01 - 01 - 2003

### அமரர் தம்பிஜயா சின்னையா

(இராசு)

சின்னையா எனும் பெயர் கொண்ட சீராளனே!
என்னையா நாம் செய்வோம் உமைப்பிரிந்து?
கண்களெல்லாம் உமது அன்புத் தோற்றம் - நீர்
விண்ணகம் சென்றுவிட்டீர் - யாருண்டு எமைத் தேற்ற
பொழுதெல்லாம் உமது குரல் எம் செவியில் - ஆலம்
விழுதுபோல் தாங்கி நின்றீர் எமை இப்புவியில்
பாசத்துக்கோர் இலக்கணம் ஆனீர் - எத்
தேசத்தில் உமைத் தேடுவோம் நாம் இனி
வாழ்வாங்கு வாழ்ந்தீர் இவ்வையகத்தில் - ஒரு
தாழ்வில்லை உமக்கு தயாநிதி சிவன்தாள் சேர்ந்தீரோ?

இன்று (31.01.2003) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் 11 மணியளவில் நடைபெறும் அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"காளிகோவிலடி", குளப்பிட்டி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (13825)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 19 - 08 - 1941



மறைவு 02 - 01 - 2003

### திருமதி சிதம்பரலிங்கம் பூரணலக்சுமி

(அன்னம்)

"பாசத்தின் ஒளியாய் ஒளிர்ந்த எம் அன்புத் தெய்வமே! எம்மை விட்டுப் பிரிந்தாலும் உங்கள் நினைவு எம் நெஞ்சங்களை விட்டு அகலா!"

நாளை (01.02.2003) சனிக்கிழமை திருநாவலூர் தெணி அம்மன் அந்தியேட்டி மண்டபத்தில் 7 மணிக்கு நடைபெறும் கிரியைகளிலும், வீட்டு மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

கணவர்: க.சிதம்பரலிங்கம்
(ஓய்வுபெற்ற காப்பாளர் இ.போ.ச.),
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

நா.மு.வீதி,
பருத்தித்துறை. (C/26271)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

தாயின் மடியில் 05 - 06 - 1927



இறைவனின் திருவடியில் 02 - 01 - 2003

அமரர்

### தில்லையம்பலம் நாகலிங்கம்

(அரச கட்டட ஒப்பந்தகாரரும், லிங்கா பில்லேடர்ஸ் எஞ்சினியரிங் சேர்விஸ் உரிமையாளரும்)

02.01.2003 அன்று மானிப்பாயில் சிவபதமெய்திய எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டு ஓடோடி வந்து எங்கள் ஆறாத்துயரில் இணைந்து எமக்கு சகல வழிகளிலும் ஆறுதல் கூறித் துயர் பகிர்ந்தோருக்கும் இறுதிக்கிரியைகளில் கலந்து சகல வழிகளிலும் பல்வேறு உதவிகள் செய்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்வதோடு, நாளை (01.02.2003) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக்கிரியை, ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து ஆனந்தன் வைரவர் ஆலயத்தில் நடைபெறும் அன்னதான நிகழ்விலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

- மனைவி, பிள்ளைகள்.

மானிப்பாய் வடகிழக்கு,
மானிப்பாய். (13877)

# இறால் வளர்ப்புத் தொழிலை விரிவாக்கி நாட்டுக்குப் பெரும் லாபம் தேடலாம்!

## சட்டவிரோத பண்ணைகளை முடக்க டேவிட் எதிரிசிங்க வலியுறுத்து




*ரி.என்.எல். தொலைக்காட்சி 'நேருக்கு நேர்' நிகழ்ச்சியில் டேவிட் எதிரிசிங்கவை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்கிரமவும், 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குருப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேசமான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி காண்கிறார்கள்.*

**வர்த்தக ஸ்பெஷல்**

ரி.என்.எல்.தொலைக்காட்சியின் வர்த்தக ஸ்பெஷல் - நேருக்குநேர் நிகழ்ச்சியில் கடந்த 28ஆம் திகதி தோன்றி. தனது தொழில் முன்னேற்றம் பற்றி விளக்கினார் டேவிட் எதிரிசிங்க.

இறால் பண்ணைத் தொழிலை அறிமுகப்படுத்தியவர் டேவிட் எதிரிசிங்க. கண்டி கிங்ஸ்வூட் கல்லூரியில் தனது பாடசாலைக் கல்வியை ஆரம்பித்த இவர், கைத்தொழல் இயந்திரவியலாளராகப் பணியாற்றினார். பின்னர் சிவில் பொறியியலாளர் பரீட்சை எழுதித் தனது தகுதியை அதிகரித்துக்கொண்டார்.

சிவில் பொறியியலாளராக கடற்றொழில் துறையில் ஈடுபட்டுவருகிறார். நீர்வாழ் உயிரினங்கள் தொடர்பான தொழில் அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவராக இருக்கும் டேவிட் எதிரிசிங்க, தனது தொழில் இரகசியங்கள் பற்றி விளக்கமளித்தார்.

ரி.என்.எல். தொலைக்காட்சியில் டேவிட் எதிரிசிங்கவை அறிவிப்பாளர் சமுதிக சமரவிக்கிரமவும், 113 கம்பனிகளைக் கொண்ட சிலிங்கோ குருப்பின் அதிபரும் நிர்வாகப் பணிப்பாளருமான தேச மான்ய லலித் கொத்தலாவலையும் செவ்வி கண்டனர். செவ்வியை இங்கே படித்துப் பாருங்கள்.

*கேள்வி:* சிவில் பொறியியலாளராகத் தொழிலை ஆரம்பித்த நீங்கள், இன்று இறால் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளீர்கள். இதுவரைகாலமும் நீங்கள் கடந்துவந்த பாதையைப் பற்றிக் கூறமுடியுமா?

*பதில்:* கடற்றொழில் துறையில் நான் சிவில் பொறியியலாளராகப் பணியாற்றிய காலத்தில்தான் இறால் வளர்ப்புப் பற்றிய அறிவைப் பெற்றுக கொண்டேன். இதனைச் சரியான முறையில் கொண்டுசெல்ல பொறியியற்றுறை பெரும் பங்குவகிக்கிறது.

*கேள்வி:* பொறியியல் துறையை எவ்வாறு தெரிவுசெய்தீர்கள்?

*பதில்:* கைத்தொழில் இயந்திரவியலாளராகத் தொழிலை ஆரம்பித்து பரீட்சைகள் மூலமே சிவில் பொறியியலாளரானேன். பின்பு கண்டி மாகாண சபையில் பொறியியலாளராகப் பணியாற்றினேன். அதன் பின்னர்தான் இறால் வளர்ப்புப் பற்றித் தெரிந்துகொண்டேன்.

*கேள்வி:* இறால் வளர்ப்பு கைத்தொழிலை நீங்கள் ஆரம்பித்தது தொடர்பாக விளக்கமாகக் கூறமுடியுமா?

*பதில்:* இறால் வளர்ப்புத் தொழில் உலகில் அறிமுகமாவதற்கு முன் இது தொடர்பாக ஜப்பானிய மாணவர் ஒருவர் ஆராய்ச்சி செய்திருந்தார். அதன்பின்னர் 1963இல் தாய்வானில் இறால் வளர்ப்பு வர்த்தக ரீதியாக ஆரம்பிக்கப்பட்டது. இன்று அந்தத் தொழில் விருத்தி அடைந்து மெக்ஸிகோ வரை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

*கேள்வி:* மரபு ரீதியான இறால் வளர்ப்பிலிருந்து நவீன முறையான இறால் வளர்ப்பு எவ்வாறு வேறுபடுகிறது?

*பதில்:-* மரபு ரீதியான முறை என்றால் பிரதேசத்தில் குறிப்பிட்ட இடங்களில் இறால் பிடிக்கப்படுகிறது. ஆனால், நவீன முறையில் இறால் முட்டைகளில் குஞ்சு பொரிக்கப்பட்டு அவற்றை நீர்த்தாங்கிகளில் வளர்க்கின்றோம். 4 மாதங்களில் இந்த இறால்கள் 30 - 40 கிராம் எடையில் வளர்கின்றன. அதன்பின்பு அவற்றை உலக சந்தைக்கு விற்பனை செய்கின்றோம். இதனால் வளர்ப்பு தொழில் ஆரம்பித்தபோது கிலோ 15 - 20 டொலர் விலைக்கு விற்கப்பட்டது.

அதனால் அந்தத் தொழிலுக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டது. இப்போதும் அதேவிலைக்கு விற்க முடியும். ஆனால், உற்பத்திச் செலவு அதிகமாகிவிட்டது.

*கேள்வி:* இறால் உயிருள்ள பிராணி. அதனால் அந்தத் தொழிலைச் செய்வதில் சிக்கல்கள் ஏற்படுவதில்லையா?

*பதில்:* சரியான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதன்மூலம் இவ்வாறான சிக்கல்களைத் தவிர்க்க முடியும்.

*கேள்வி:* இந்தத் தொழிலை மேலும் அபிவிருத்தி செய்ய அரசு என்ன நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நினைக்கின்றீர்கள்?

*பதில்:* இதன்மூலம் வறிய குடும்பங்களைச் சேர்ந்த பெண்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படுகிறது. இன்று ஒரு லட்சம் பேர்வரை இறால் வளர்ப்புத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். 25 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் இதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. புத்தளம் மாவட்டத்தில் இது ஒரு பாரிய கைத்தொழில். இதனால் 70 துணைக் கைத்தொழில்கள் உருவாகியுள்ளன.

*கேள்வி:* இந்தத் துணைக் கைத்தொழில்கள் எந்த அடிப்படையில் உருவாகியுள்ளன.

*பதில்:* அது ஒரு சாதாரண விடயம். இறால் வளர்ப்பு, சந்தைப்படுத்தல், போக்குவரத்து என்று பல உள்ளன. அவற்றின்மூலமாக இந்தத் துணைக் கைத்தொழில்கள் உருவாகியுள்ளன.

*கேள்வி:* ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது எமது உற்பத்திகளின் தரம் எவ்வாறு இருக்கிறது?

*பதில்:* எமது உற்பத்திகளுக்கு சந்தை வாய்ப்பு நன்றாகவே இருக்கிறது. எமது பொருள்களின் உயர் தரமே அதற்குக் காரணம்.

*கேள்வி:* தொற்று நோய் அபாயங்கள் எவ்வாறு இருக்கின்றன?

*பதில்:* சிறிது காலத்திற்கு முன்பு இறால்களுக்குத் தொற்று நோய் ஏற்பட்டது. அப்போது இறால் விற்பனை சந்தையில் பின்னடைவு ஏற்பட்டது. 1994இல் தாய்வானில் இந்த வெள்ளை புள்ளிகள் ஏற்படும் நோய் ஆரம்பமானது.

*கேள்வி:* அரசிடம் என்ன எதிர்பார்க்கிறீர்கள்?

*பதில்:* அரசு செய்யக்கூடியது அதிகம் இருக்கின்றது. இன்று உத்தியோகபூர்வமாக இருக்கும் இறால் உற்பத்தியாளர்களைவிட அதிகாரபூர்வமில்லாமல் இதில் ஈடுபடுபவர்கள் அதிகமாக இருக்கிறார்கள்.

இதனைத் தடுத்து நிறுத்தவேண்டும். ஆனால், மஹிந்த விஜயசேகர போன்ற ஒருவர் கடற்றொழிலுக்குப் பொறுப்பான அமைச்சராக இருந்து ஆற்றும் பணி சிறப்பானது.

சட்டவிரோதமாக இறால் உற்பத்தியில் ஈடுபடுபவர்களால்தான் அதிகமான பிரச்சினைகள் உருவாகியுள்ளன.

எனினும், இவற்றிற்கு நிரந்தரமான தீர்வு ஒன்றை ஏற்படுத்தும் திட்டம் அமுல்படுத்தப்படும் என்று பிரதமரின் நிதி ஆலோசகர் பாஸ்கரலிங்கம் எமக்கு உறுதியளித்திருக்கிறார்.

*கேள்வி:* வங்கித்துறை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

*பதில்:* நான் பல வங்கிகளுடன் தொடர்பு வைத்திருக்கிறேன். அந்த வங்கித்துறையினர். எமக்குச் சிறந்த ஒத்துழைப்புக்களைத் தருகிறார்கள்.

- இவ்வாறு கூறினார் டேவிட் எதிரிசிங்க. ★

# பாதுகாப்பு வலயம், ஆயுதக் கையளிப்பு நிபந்தனை சமாதானப் பாதைக்குத் தடையாகி விடக்கூடாது!

## யாழ். விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அறிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.31

உயர் பாதுகாப்பு வலயங்களும் ஆயுதக் கையளிப்பு நிபந்தனைகளும் சமாதானப் பாதையில் தடையாக இருக்கக்கூடாது என்பதே எல்லா மக்களின் எதிர்பார்ப்புமாகும்.

யாழ்மாவட்ட விவசாய நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயங்களில் மீள்குடியமர்வு தொடர்பாக இந்திய இராணுவ அதிகாரி சதீஸ் நம்பியார் தெரிவித்துள்ள யோசனைகளைக் கண்டித்து விடுத்துள்ள ஓர் அறிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார். அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்குடாநாட்டில் உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பாக ஓய்வு பெற்ற இந்திய இராணுவ லெப்ரினன்ட் ஜெனரல் சதீஸ் நம்பியார் ஸ்ரீலங்கா அரசுக்கு விடுத்த பூர்வாங்க அறிக்கையில் விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கையளிக்க வேண்டும் எனக் கூறியிருப்பது கவலையளிக்கக் கூடியதாகும்.

நிபுணத்துவ ஆலோசனைகள் நடுவு நிலைமையானதாக இருக்க வேண்டும் என்பது சாதரண எதிர்பார்ப்பு. ஆனால், ஜெனரல் சதீஸ் நம்பியாரின் அறிக்கை அவ்வாறானதல்ல என்பது தெளிவாகத் தெரிகிறது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு பின்னர், பத்துப் பிரதேசங்கள்வரை உயர் பாதுகாப்பு வலயங்களாக ஒருதலைப்பட்சமாக ஸ்ரீலங்கா இராணுவத்தினரால நிர்ணயிக்கப்பட்டு, அப்பகுதி மக்கள் அங்கு மீளக்குடியமர முடியாமற் செயயப்பட்டுள்ளதே. இதற்கும் ஆயுதக் களைவுக்கும் எப்படி முடிச்சுப்போடலாம்?

ஆயுதப் போராட்டம் என்பது அரசோ, வேறுயாருமோ கேட்டவுடன் வெறுமனே ஆயுதக் கையளிப்பு செய்வதற்காக ஆரம்பிக்கப்பட்டதோ, தொடரப்பட்டதோ அல்ல. அது தமிழீழ மக்களின் விடுதலையோடும், தன்னாட்சியோடும், சுயநிர்ணய உரிமையோடும், இயல்பு வாழ்க்கையோடும் தொடர்புடையது. இதில் எதுவுமே நிறைவேறாமல் ஆயுதக் கையளிப்புப் பற்றிப் பேசுவது அர்த்தமற்றது.

ஆயுதக் கையளிப்புப் பற்றிப் பேசுவது இது ஒன்றும் புதிதுமல்ல; முதலாவதும் அல்ல. இந்திய இராணுவம் தமிழீழ மணணை ஆக்கிரமித்து நின்றபோதும், ஆயுதக் கையளிப்புப் பற்றித்தான் பேசினார்கள். ஒருவேளை இது ஒரு மாற்றமுடியாத சிந்தனை அலைபோலும்.

1987 - 1988களிலும் ஆயுதக் கையளிப்புப் பற்றிப் பேசினார்கள். அப்பொழுது அதுபற்றிப் பேசுவது அர்த்தமற்றது என்றும், யுத்தநிறுத்தம் செய்து, விடுதலைப் புலிகளுடன் மட்டும் பேச்சு நடத்தி தீர்வுகாண வேண்டும் அல்லது அவர்கள் மறைவு வாழ்க்கையில் இருந்து கொண்டு தொடர்ந்து போராடுவார்கள் எனக் கூறியிருந்தேன். அதுவே யதார்த்தமானது என்பது கடந்த பதினைந்து வருடகாலமாக நிரூபிக்கபபட்ட பின்பும், ஆயுதக் கையளிப்பை முன்நிபந்தனையாக்குவது எந்தவகையிலும் நியாயப்படுத்தக்கூடியதல்ல.

விடுதலைப் புலிகள் ஒரு முறை ஆயுதக் கையளிப்புச் செய்தனர். அதனால் ஆயுதப் போராட்டம் நின்றுவிட்டதா என்ன?

இந்தியாவில் கூர்க்கா தேசிய விடுதலை முன்னணியும், அரசியல் தீர்வின்போது ஆயுதக் கையளிப்புச் செய்தது. அது பற்றி அதன் தலைவர் சுபாஷ் கீசிஸ்கிடம் "ஆயுதத்தைக் கையளிக்கின்றீர்களே போராட்டம் தேவைபென்றால் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டபோது அவர், "இப்பொழுது எப்படி ஆயுதங்களைப் பெற்றேனோ அப்படி பின்னர் தேவைப்படாலும் என்னால் பெற்றுக்கொள்ளமுடியும்"-என்றார்.

இதேபோன்றதுதான் விடுதலைப் புலிகளின் நிலையும் எனக் கருத வேண்டும். தமிழீழத்தின் மரபுவழி இராணுவத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஆயுதங்களை உலகின் எந்த நாடோ, அரசோ அவர்களுக்கு கொடுக்கவில்லை. அவர்களே பெற்றுக்கொணடனர். தேவைப்படின் பெற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் அவர்கள் இருப்பதை எவரும் ஏற்றுக்கொள்ளாமல் இருக்க முடியாது.

எனவே, இயல்புநிலை தோற்றுவிப்பதற்கும் அரசியல் தீர்வு எட்டப்படுவதற்கும் முன் நிபந்தனைகளாக ஆயுதக் கையளிப்புப் பற்றிப் பேசுவது சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்தாது, அது எதிர் விளைவுகளை ஏற்படுத்தக் கூடியது. எனவே, ஸ்ரீலங்கா அரசு ஆயுதக் கையளிப்பு ஆலோசனையை அப்படியே நிராகரித்துவிட்டு மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு ஏதுவான சகல நடவடிக்கைகளையும் எடுத்தல்வேண்டும்.

இதற்கமைய புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு பின்பு உயர் பாதுகாப்பு வலயங்களாக இராணுவம் குறிப்பிடும் இடங்களை அப்பகுதி மக்கள் மீண்டும் அங்கு குடியேறக்கூடியதாக நடவடிக்கைகளை மேற்கொள்வதுதான் அரசின் சமாதான முயற்சியை சாதகமான முறையில் முன்னெடுப்பதற்கான ஏற்ற வழிமுறையாகும்.

சகல தரப்பும் சமாதானத்தை நோக்கிப் பிரார்த்தித்து நகரும் வேளையில், உயர் பாதுகாப்பு வலயங்களும், ஆயுதக் கையளிப்பு நிபந்தனைகளும் தடையாக இருக்கக்கூடாது என்பதே எல்லா மக்களினதும் எதிர்பார்ப்பாகும் என்பதை குறிப்பிட விரும்புகின்றோம் - என்றுள்ளது. (ஐ-3-17)

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

சுத்த இன ஜேர்மன் ஒருவயது நிரம்பிய சனல் கடாவும், 10சோடி தேக்கம் கதவுகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: A.G. செல்வம், 107, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.(13854)

யாழ்ப்பாணம் டவுணுக்கு அருகிலுள்ள அமைதியான நல்ல சூழலில வீடுகள் அமைந்த பகுதியில் நான்கு பரப்பில் வரவேற்பறைகள், நான்கு படுக்கை அறைகள், சமையலறை மற்றும் இடவசதி கொண்ட வீடு வெறும் நிலங்களுடன விற்பனைக்குண்டு. தொடர்பு: விளம்பர இல.1761 C/o உதயன் யாழ்ப்பாணம். (13828)

மோட்டறோலா தொலைபேசி விற்பனைக்குண்டு. தொடர்பு: சு.சசிகரன், இந்துப் பாடசாலை வீதி, வல்வெட்டி, வல்வெட்டித்துறை. T.P.No. 070-212666. (13890)

SONY T.V., NATIONAL T.V. (29", 21",20",19",18",14",) மற்றும் DECK, RADIO SET என்பன உத்தரவாதத்துடன் விற்பனைக்குண்டு. (அனைத்தும் ஜப்பான் நாட்டு தயாரிப்பு) தொடர்பு: இல.142, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (13875)

### உடன் விற்பனைக்கு

உருக்கு இரும்பினாலான பாதுகாப்பு பெட்டகம் (Iron Safe) நீளம் 1' 10", அகலம் 21/2' உயரம் 2'9" Birmincham Safe - Made in England விற்பனைக்குண்டு. தொடர்பு: திரு.க.சண்முகநாதன் (பவுண்), 'மணிவாசா', செங்குந்தா வீதி, திருநெல்வேலி கிழக்கு. (13871)

### எங்கள் நாடு

பரிசுபெற்ற இலங்கை வானொலி நாடகங்கள், எங்களது வாழ்க்கையைச சித்திரிக்கும் ஏழு நாடகங்கள். 350 நாடகங்கள் எழுதிய கலாபூஷணம் அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை எழுதியவை. படிக்கலாம், நடிக்கலாம் ரூபா 75/-. (13845)

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, 33 வயது, செவ்வாய்த் தோஷமற்ற மணமகனிற்கு ஏற்ற மணமகள் லண்டனில் தேவை. தொடர்பு இல.1762 C/o உதயன். (13837)

### இடமாற்ற உத்தரவு ரத்து

சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் பணியாற்றும் உதவி மருத்துவ உத்தியோகத்தர் டாக்டர் திருமதி இராஜேஸ்வரி சிவலிங்கத்துக்கு வழங்கப்பட்ட இடமாற்ற உத்தரவு இரத்துசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக இவருக்கு அக்கராயன்குளம் ஆஸ்பத்திரிக்கு இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தது. இதனையடுத்து தென்மராட்சி பிரதேச பொது அமைப்புக்கள் இந்த இடமாற்ற உத்தரவை ரத்துசெய்யுமாறு கோரிவந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ-117)

### யாழ். ஆஸ்பத்திரிக்கு புதிய ஆன்மீக குரு

கொழும்புத்துறை,ஜன.31

யாழ்.போதனா வைத்தியசாலையின் புதிய ஆன்மீக இயக்குநராக அருள்திரு டிசி. இரட்ணராஜா அடிகள் யாழ். ஆயரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, கடந்த நாலரை ஆண்டுகளாக இந்த வைத்தியசாலையின் ஆன்மீக குருவாக பணியாற்றிய அருள்திரு. செ.அன்புராசா அடிகள் வவுனியா மறைமாவட்டத்தில் பணியாற்றச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-30)


### தேவை

எமது தொழிலகத்துக்கு வேலை பழகிய, பழகவிரும்புகிற துடிப்புள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை. (06.02.2003) வியாழக்கிழமை அன்று நேரில் வரவும்.

ஸ்ரீ மாருதி ஸ்ரார் இனிப்புத் தொழிலகம்
சுரேஸ் இன்டஸ்றீஸ்,
6/12, விதானையார் வீதி,
சுண்டிக்குளி.
(13898)

### தேவை

வெல்டிங்வேலைக்கு ஆள்கள் தேவை. அத்துடன் உதவியாளர்களும் தேவை. உடன்நேரில்வரவும்.

தொடர்புகளுக்கு:
தக்ஷிகா வெல்டிங் வேக்ஸ்,
இல.21, பீச்றோட்,குருநகர்.
(13878)


# அம்பிகையின் உபாசகனாய் வாழ்ந்து அற்புதங்கள் புரிந்த அபிராமிப்பட்டர்

**'அபிராமி அந்தாதி' அருளிய அபிராமிப்பட்டரின் குருபூசை தினம் நாளை சனிக்கிழமையாகும். அதனை முன்னிட்டு இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

உலகாளும் நாயகியாம் ஆதி பராசக்தியைப் போற்றித் துதிக்கும் பாமாலைகள் அநேகம். அவற்றில் சிறப்பிடம் பெறுபவற்றில் அபிராமி அந்தாதியும் ஒன்றாகும். அன்னையின் தரிசனங்கண்டு அந்தாதி பாடியவர் அபிராமிப்பட்டர்.

மாறி நின்று மயக்கி, வஞ்சனை செய்யும் புலன் ஐந்தையும் ஒடுக்கி, அன்னை பராசக்தியால் ஒன்றி வாழ்ந்து உயர்ந்தவர் பட்டர்பிரான்.

புவனம் பதினான்கையும் காக்கும் புவனேஸ்வரியுள் பாரும், புனலும் படர்விசும்பும், கனலும் காற்றும் எல்லாம் அடக்கம் என்று எண்ணி அடைக்கலம் அடைந்தவர் பட்டர் பிரான்.

கண்ணில் காணும் பெண்களை எல்லாம் ஆதி பராசக்தியாக நினைத்து வணங்கித் துதிப்பது இவர் வழக்கம்.

ஆனால், பட்டரின் பக்திநிலை உண

**ஞானக்கதிர்**

ராது பலர் அவரைக் கேலி செய்து வசைபாடியும் பெண் பித்தர் என்று தூற்றினர். துர்த்தேவதையை வழிபட்டு, வாமாசாரத்தைக் கைக்கொண்டு மனம் பேதலித்து அலையும் அறிவிலி என்று ஊரார் வக்கணை பேசினர்.

சத்திய நெறியில் நின்று, நித்திய ஒளியைக் கண்டு நின்ற பட்டர் ஏச்சையும் பேச்சையும் பொருட்படுத்தவில்லை. வேதமும் நாரணனும், நான்முகனும், ஆதித்தன், அம்புலி, அமரர்கோன், கணபதி கந்தன், காமனோடு தேவர் பலரும் முனிவரும் அம்பிகையின் அருள்வேண்டி நிற்பதைப் புரிந்து, அவ்வழியே தானும் சென்றடைய அன்னையின் அடியவனாய் அவள் அருளை சுமந்து தூய்மையில் திளைத்திருந்தார்.

சக்தி பூசையிலும், யோக நெறியிலும் வல்லவரான பட்டர் பிரான் திருக்கடவூரில் அந்தணர் குலத்தில் இற்றைக்கு ஐந்நூறு ஆண்டுகளுக்கு முன் பிறந்தவர். ஞானச் சுடராய்த் தோன்றிய குழந்தைக்கு சுப்பிரமணியம் எனப் பெயரிட்டனர்.

இசையிலே வல்லவராகிய பட்டர் அம்பிகையின் திருநாமத்தை இணைத்து அபிராமிப்பட்டர் என்ற திருப்பெயரால் அழைக்கப்பட்டார்.

தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு அரசோச்சிய சரபோஜி மன்னர் காவிரி சங்கமத்தில் நீராடி அமுதகடேஸ்வரரையும் அன்னை அபிராமியையும் தரிசிக்கப் பெறவேண்டி ஒருநாள் பரிவாரங்களுடன் ஆலயத்துக்கு வருகைதந்திருந்தார். அம்பிகையின் சந்நிதியில் நினைவிழந்து நிஷ்டைகூடி இருந்த பட்டரை மன்னன் கண்ணுற்றான். பட்டரின் சாந்த சொரூபம் மன்னனைக்கவர்ந்தன இவர் யார்? என வினாவினான் பட்டரின் அருமை அறியாதவர். "வேதவிருத்தமான வாமாசாரங்களின் ஈடுபடும் ஒரு பித்தர், துர்த்தேவதையை வழிபடும் துன்மார்க்க" என்றோதிப்பணிந்தான்

அம்பிகையின் தரிசனம் முடிந்ததும் முடி மன்னன் முற்றும் துறந்த பட்டரிடம் பேசும் ஆவல் கொண்டான். தியானத்தில் இருந்த பட்டர் கொற்றவன் வந்ததை உணர்ந்திலர்.

வேந்தர் பெருமான் குனிந்து இன்று என்ன திதி? என வினாவி நின்றார். முழுமதியில் உள்ளே அபிராமியின் அருளதோற்றத்தைப் பார்த்து பரவசம் கொண்டு நின்ற பட்டர் அரசனுக்கு "இன்று பௌர்ணமி போடா "என விடைபகன்று அசையாதிருந்தார். அமாவாசைத் திதியான இன்று பௌர்ணமி என பட்டர் மொழிந்ததைகேட்டு மன்னர் துணுக்குற்றார், கூடி நின்றார், மலைத்தனர். அரசனும் அவர் புனிதத்தை அறியாது மற்றவர்கள் சொன்னதை உண்மையென எண்ணி தியானம் கலைந்த பின்பு தன் இருப்பிடத்துக்கு அழைத்துவரும்படி ஆணையிட்டு மீண்டார்.

தியானம் கலைந்து எழுந்த பட்டர் அந்தணர் மூலம் நடந்தவைகளை அறிந்து வருந்தினார். இருந்தும் எல்லாம் அவள் செயல் என்று துணிந்து கொற்றவன் முன் நின்றார். சினம் கொண்ட மன்னன் "இன்று அமாவாசை அல்லவா? உமது கூற்றுப்படி முழுநிலவு வானில் தோன்றுமா?" என கடும்தொனியில் வினாவினான்.

இதற்குப் பட்டர் சிறிதும் தயக்கமின்றி "தோன்றும்" என விடையிறுத்தார். "தோன்றாது போனால் எரியும் சிதையுள் வீழ்ந்திறக்கவேண்டும் என்று மன்னன் ஆணையிட்டார்.

ஆழக்குழி வெட்டித் தீமூட்டப்பட்டது. விட்டத்தில் உறி ஒன்று கட்டப்பட்டது. உறிமீது நூறு முடிச்சுக்கள் போடப்பட்டன. உலக மாதாவை சரண்புகுந்து, பட்டர் உறியில் ஏறினார். "உதிக்கின்ற உச்சித் திலகம்" எனத் தொடங்கும் அந்தாதியைப் பட்டர் பாடத் தொடங்கினார். ஒவ்வொரு பாடல் முடிவிலும் உறியின் ஒவ்வொரு முடிச்சும் வெட்டப்பட்டது. இயற்கையிலேயே இசை ஞானம் உள்ள பட்டர் உள்ளம் உருகிப் பொழிந்த இசை மழையில் கூடி நின்றார், மெய்மறந்து பக்தியில் திளைத்து நின்றனர். அம்பிகையின் பேரழைகையும், பேரருள் கடாட்சத்தையும் இப்பிறப்பில் பெறற்கரிய பேறுகளை ஈயும் தன்மையையும் சுட்டி நின்ற பாடல்கள் கல் நெஞ்சையும் கரைய வைத்தன. எல்லோரையும் ஈர்த்தன. எழுபத்தியெட்டுப் பாடல்கள் முடிந்தன. கதிரவனும் மேற்றிசைக்கேகினான். செவ்வானமும் கறுத்தது. காரிருளும் சூழ்ந்தது. பட்டர்பிரான் நின்ற உறியும் எரியும் தீச் சுவாலையை அண்மித்தது.

விழிநீல் மல் 79 பாடலான,

*விழிக்கே அருளுண்டு அபிராம வல்லிக்கு வேதம் சொன்ன*
*வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கவ் வழி கிடக்க*
*பழிக்கே சுழன்று வெம் பாவங்ளே செய்து பாழ்நரக*
*குழிக்கே யழுந்தும் கயவர் தம்மோ டென்ன கூட்டினியே"* என்று பாடினார்.

அப்போது ஸ்ரீ அபிராமியம்பிகை தன் பக்தர்க்கு வெளிப்பட்டு திருவுருவைக் காட்டியருளினார். தனது காதில் அணிந்திருந்த காதணியைக் கழட்டி தாயானவள் வான வீதியிலே தவளவிட்டாள். அந்தக் காதணி முழுநிலவின் உருவெடுத்து ஒளியைப் பொழிந்தது. ஆனந்த சொருபிணியாம் அன்னை "அன்பனே கவலையை விடுக. வாய் தடுமாறி நீ கொற்றவனிடம் கூறிய கூற்றை மெய்யென நிறுவினோம். பழிச் சொல்லை விலக்கி

**கந்த.தியாகராசா**

னோம். வசைபாடி வைதார் வாய்களையும் மூடினோம். தொடங்கிய இவ்வந்தாதியைத் தொடர்ந்து பா முடிப்பாயாக. வையத்துள்ளார் பாடி பயன் பெற்றுய்யட்டும்" என்று ஆணையிட்டாள். அம்மையின் அருளாணைப்படி எஞ்சிய இருபது பாடல்களையும் பாடி திருவந்தாதியைப் பட்டர் முடித்தார். எரியும் தீயும் அணைந்தது. அமாவாசைத் திதித் தினத்தில் புவனமெங்கும் திருத்தாடங்கத்தில் திகழொளி பூரண நிலவாய் விளங்கி நிற்கும் அதிசயத்தைக் கண்ட மக்கள் 'அற்புதம் அற்புதம்' என புவன நாயகியைப் போற்றி ஆரவாரம் செய்தனர். சரபோஜி மன்னரும் மனம் நெகிழ்ந்து மண்டியிட்டு தாம் இழைத்த பிழையைப் பொறுக்குமாறு வேண்டிக்கொண்டார். ☆


## தேசத்துக்காக உயிர்நீத்த தமிழ் மறவனின் 3ஆம் ஆண்டு நினைவலைகள்

தாயக மண்ணில் மலர்வு 1979 - 11 - 19



தாயக மண்ணில் உதிர்வு 2000 - 01 - 31

### நித்தியானந்தராசா சுபாகரன்
### லெப்.பூவாணன்

**தலைவன் வழியிலே தணலாக எழுந்தவனே - சிங்கள**
**சேனைகள் விழிகளிலே புயலாக உழன்றவனே!**
**தமிழர் வெற்றிக்காய் அரசியல் ஏற்றவனே! - யாழ்.**
**மண்ணினிலே வீறுநடை போட்டவனே!**

**பொறிக்குள் பொறியாக நின்றவனே! - எதிரிக்கு**
**யாழ்.மண்ணில் பொறிகள் பல வைத்தவனே!**
**மண் பறிக்க வந்தவரை - தலை**
**பறிக்க துணிந்தவனே!**

**மூச்சடங்கி - உயிர்**
**பேச்சடங்கி - செயல்**
**வீச்சடங்கி போனவனே - உன்**
**பணி தொடர்வோம் - உன்**
**நினைவு எம் நெஞ்சில் - உதிராத மலராக**
**என்றென்றும் மலர்ந்திருக்கும்.**

*இவர் யாழ். கொட்டடி சீனிவாசகம் வீதியில் இராணுவத்தினர் 31-01-2000 அன்று சுற்றிவளைத்தபோது ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவை தழுவிக் கொண்டார்.*

நண்பர்கள்,
யாழ்ப்பாணம்.
(13894)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



### திருமதி சரஸ்வதி சிவசுப்பிரமணியம்

மண்ணுலகில் 29-05-1950
விண்ணுலகில் 17-12-2002

எங்கள் அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்திகேட்டு உடன் ஆறுதல் தந்து உதவிகள் புரிந்தோருக்கும் தொலைபேசிமூலம் அனுதாபச் செய்திகள் தெரிவித்தோருக்கும் இறுதிக்கிரியைகளில் தோளோடு தோள்நின்று உதவி புரிந்தோருக்கும் நன்றி தெரிவிப்பதோடு, இன்று (31. 01. 2003) வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
கணவர் - க.சிவசுப்பிரமணியம்,
பிள்ளைகள்.

*124/1, இராசாவின்தோட்டம் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (13893)

## மரண அறிவித்தல்

### திருமதி திரேசா தவமணி காசிப்பிள்ளை

திருமதி திரேசா தவமணி காசிப்பிள்ளை நேற்றுமுன்தினம் 29.01.2003 புதன்கிழமையன்று லண்டனில் காலமானார்.

அன்னார் கந்தையா காசிப்பிள்ளை (நில அளவையாளர்)யின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான றொபேட், கனகரட்ணம்மான் (Mann) - மன்டெலின்மான் (Mann) ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னம்மா ஆகியோரின் பாசமிகு மருமகளும், ஜெயராணி, ரவீந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரமேஷ் (Denmark), சுரேஷ்(Zimbawe), சுரேகா (Toronto, Canada) சதீஷ் (Denmark), ரேணுகா(U.K.) ஆகியோரின் அன்புத் தாயாரும் வாணி (Denmark), ஜனாகி (Zimbawe), நந்தகுமார்(Canada), Paula (Denmark), நிமலானந்தன்(U.K.) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஜெயராஜாவின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று(31.01.2003) வெள்ளிக்கிழமை Illford (U.K.)இல் நடைபெறும்.

இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகிறோம்.

*06. St.Annes Lane,*
*Manipay.*
*T.P: 021-222 3278.* (13891)

தகவல்:
C.காசிப்பிள்ளை
(கணவர்)

# மலையக மக்களின் பிரஜாவுரிமை பற்றிய திருத்தச் சட்டத்தை திருத்தவும் ஆலோசனை

நேற்றுமுன்தினம் காலையில் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற மலையக மக்களின் பிரஜாவுரிமை தொடர்பான திருத்தச்சட்டம் மீதான விவாதத்தில் பலத்த சர்ச்சைகள் இடம்பெற்றன.

அண்மையில் புதிய அமைச்சர்கள் சிலர் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டனர். எனினும், நேற்றுமுன்




தினம் முன்வரிசை ஆசனங்களில் நான்கு அமைச்சர்களும், அதற்குப் பின்னுள்ள வரிசைகளில் இருபதுக்கும் குறைவான அரச எம்.பிக்களும் மட்டுமே அமர்ந்திருக்க, நீதியமைச்சரும் சபை முதல்வருமான லொக்குபண்டார பிராஜாவுரிமைச் சட்டமூலத்தைச சமர்ப்பித்தார்.

எதிர்வரும் மார்ச் மாதம் பெண்கள் உரிமைகளுக்கான தினத்தை நினைவில் கொள்கின்றோம். அதற்கான 'போனஸ்' பரிசாக இந்தத் திருத்தச் சட்டத்தை முன்வைக்கிறேன். ஒரு பிள்ளையின் தகப்பன் இலங்கையில் பிறந்திருந்தால் மட்டுமே அவரது பிள்ளைக்குப் பிரஜாவுரிமை வழங்கப்படும் என்று கூறப்பட்டுள்ள சட்டம் இப்போது திருத்தப்படுகின்றது. தாயார் இங்கு பிறந்தவராக இருந்தாலும் அந்தப் பிள்ளைக்கு இந்தத் திருத்தம் மூலம் பிரஜாவுரிமை கிடைக்குமெனக் கூறி எதிர்க்கட்சி எம்.பிக்களை நோக்கி புன்னகைத்தார்.

அவரது பீடிகையுள்ள பேச்சுக்கு அங்கிருந்து எதுவித வரவேற்பும் கிடைக்கவில்லை. சபையின் இருசாராரும் திருத்தச் சட்டத்தை வரவேற்று வாக்களிக்கவேண்டும் எனக் கோரி அமைச்சர் அமர்ந்தார்.

**புத்திரசிகாமணி**

எதிர்க்கட்சியின் சார்பில் விவாதத்தினை ஆரம்பித்தவர் ப.புத்திரசிகாமணி. ஐக்கிய தேசியக் கட்சியில் தொழிற்சங்கவாதியாக நெடுநாளாக இருந்தவர் என்பதை அவரது பேச்சு, முத்திரை குத்திக்காட்டியது.

ஒரு திருத்தத்தினைக் கொண்டுவந்து எமது மக்களைத் திருப்திப்படுத்த முனைவதைவிட பிரஜாவுரிமைச் சட்டத்தில் பாரிய மாற்றத்தைக் கொண்டுவந்து, இன்றும் நாடற்றவர்களாக இருக்கும் அனைவருக்கும் பிரஜாவுரிமை கொடுத்திருக்கலாமே? முழு ரொட்டியைக் கொடுக்கும் மனம் உங்களுக்கு இல்லை. துண்டு துண்டாகப் பிய்த்துப் போடுகிறீர்கள். இதில் எவ்வாறு நாம் உடன்பாடு காணுவது என சலித்துக்கொண்டார் அவர்.

**வேலாயுதம்**

ஐக்கிய தேசிய முன்னணி சார்பில் மலையக தொழிற்சங்கவாதியான கே.வேலாயுதம் மிகவும் அடக்கமாகவே கருத்துக்களைக் கூறலானார்.

மலையக மக்களின் பிரஜாவுரிமை விடயத்தில் எந்தவோர் அரசும் முற்றுமுழுதாக எதனையும் செய்துவிடவில்லை. ஆயினும், தற்போது முன்வைக்கப்பட்டுள்ள திருத்தம் எமது மக்களுக்குச் சற்று தெம்பைத் தருவதாக உள்ளது என அவர் கூறிய போது புத்திரசிகாமணி அதனை ஏற்காது இடைமறித்தார்.

'ஏன் சுற்றிவளைக்க முனைகிறீர்கள்? வெளிப்படையாக அரசை விமர்சியுங்களேன்!' - என்றார் புத்திரசிகாமணி.

அடக்கமாகவே உரையை ஆரம்பித்த வேலாயுதம், இந்தக் குறுக்கீட்டினால் ஆத்திரமடைந்தார்.

எமது மக்களின் பிரச்சினைபற்றி கூறிக்கொண்டிருக்கிறேன். உங்களது மடக்கல்களுக்குப் பதில் கூறும் கடப்பாடு எனக்கில்லை. நாடற்றவாத நிலையை எமது மக்களுக்கு உருவாக்கியதும் ஐக்கிய தேசியக் கட்சியே. அதனைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதும் ஐக்கிய தேசியக் கட்சி அரசே என நறுக்கெனக்கூறி, புத்திரசிகாமணியை மடக்கினார் வேலாயுதம்.

**அநுராதிஸாநாயக்க**

இதனையெல்லாம் ரசித்தவாறு பார்த்துக்கொண்டிருந்தனர் ஜே.வி.பியின் எம்.பிக்கள். அவர்களில் ஒருவரான அநுரா திஸாநாயக்க பேச ஆரம்பித்தார்.

மலையக மக்களின் பிரஜாவுரிமை எதற்காக பறிக்கப்பட்டது? பின்னர் ஏன் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டு படிப்படியாக அவர்களுக்கு பிரஜாவுரிமை மீண்டும் வழங்கப்படுகிறது? என்பதை விவரிப்பதில் ஆர்வங்காட்டி, எல்லாம் பதவியைப் பாதுகாத்துக் கொள்ள, பதவியிலிருந்த அரசும் மேற்கொண்ட ஸ்டன்ட்டுகளே என்று குறிப்பிட்டார் அவர்.

- இவ்வாறுதான் புலிகளுடன் புது நாடகமொன்றை அரசு அரங்கேற்றிக் கொண்டிருககிறது எனப் புலிகள் விடயத்திற்குத் தாவினார் அவர்.

அதுவரை அமைதியாக சபை நடவடிக்கைகளை அவதானித்துக் கொண்டிருந்த அமைச்சர் அஸ்வர் ஆத்திரமடைந்தார். ஆசனத்தைவிட்டெழுந்தார். அரசியல் அரிச்சுவடி கூடத் தெரியாத நீங்கள், பிரஜாவுரிமை சட்டம் பற்றி ஏன் பேசவிளைய வேண்டும்? மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப்போட முனையாதீர்கள் எனச் சாடினார்.

வயோதிப நிலையில் நீங்கள் அரசியல் பயில்கிறீர்கள் என அநுரா திஸநாயக்க கூறவே, இலங்கை பிரஜாவுரிமைச் சட்டம் நடாளுமன்றுக்குக் கொண்டுவரப்பட்டபோது நீங்கள் பிறந்திருக்கவுமில்லை என்றார் அமைசசர் அஸ்வர்.

சபாநாயகர் குறுக்கிட்டு, இங்கு பிறப்பும் அது தொடர்பான பிரஜாவுரிமை பற்றியுமே பேசப்படுகிறது. அமைதி பேணுங்கள் எனக்கூற இருவரும் இணக்கம் கண்டனர்.

**சதாசிவம்**

பொதுஜன ஐக்கிய முன்னணி எம்.பி.எஸ்.சதாசிவம், தோட்டத் தொழிலாளர்களின் வரலாறு 150 ஆண்டுகளாக லயன்களுக்குள் அடங்கிவிட்டது எனக் குறைப்பட்டார்.

அன்று அடக்கப்பட்டவர்கள் இன்னும் முழுதாக அந்நிலையிலிருந்து விடுவிக்கப்படவில்லை. 1948ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட பிரஜாவுரிமைச் சட்டத்தினால் எமது மக்களின் உரிமைகள் முற்றாகவே பறிக்கப்பட்டன.

இந்தத் திருத்தம் இலங்கையில் தாயார் பிறந்திருந்தால் அவரது பிள்ளை இலங்கைப் பிரஜையாகலாம என்ற சிறிய சலுகையைக் காட்டுகிறது. அது போதுமானதல்ல. நாடற்றவர் என்ற நிலையில் இருக்கும் அனைவரும் இலங்கைப் பிரஜைகளாக மாறக்கூடியதாக சட்டத்தில் திருத்தம் வேண்டும் என்றார். இது அரசதரப்பின் கவனத்தை ஈர்த்தது.

**குமார்திஸாநாயக்க**

பொதுஜன ஐக்கிய முன்னணியின் நுவரெலியா மாவட்ட எம்.பி. குமார் திஸாநாயக்க பேசும்போது அவரது பார்வை திருத்தச்சட்டத்தைப் பல்வேறு கோணத்தில் நோக்கியது.

மலையக மக்களின் பிரஜாவுரிமை பற்றிப் பேசுகிறீர்கள். அதனைப் பெறுவதற்கு அவர்கள் உயிர்வாழ வேண்டுமே! மாவின் தற்போதைய விலையென்ன? மண்ணெண்ணெய்யின் விலை எத்தனை முறை அதிகரிக்கப்பட்டது? அதற்கேற்ப தோட்டத் தொழிலாளருக்கு சம்பள உயர்வு தரப்படவில்லை. அவர்களை வாழவைப்பதற்கு முதலில் வழியைப் பாருங்கள் என அரசின் மீது பொரிந்து தள்ளினார் அவர்.

**ராஜாகொலுரே**

பொதுஜன ஐக்கிய முன்னணியின் ராஜாகொலுரே தாம் ஒரு கம்யூனிஸ்ட் என்பதை எடுத்துக்காட்டுவதை அவரது உரையின் கருவாக்கிக் கொண்டார்.

அவர் உரையாற்றும் போது சரத் சந்திரராஜகருணா, சபை நடவடிக்கைகளுக்கு தலைமை வகித்ததைக் கண்டு நீங்கள் இன்று மட்டுமே இச்சபைக்குத் தலைமை தாங்கலாம். நாளை அமைச்சராகி விடுவீர்கள் என அட்வான்ஸ் வாழ்த்துக்கள் கூறி தொடர்ந்தார்.

தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளுக்கு எமது கட்சி அது ஆரம்பித்த காலம் முதற்கொண்டே போராடி வருகின்றது என அவர் கூற ஜே.வி.பியினர் மத்தியிலிருந்து மெல்லிய சிரிப்பொலி எழுந்தது.

**சிவலிங்கம்**

விவசாயக் கால்நடை அபிவிருத்தி பிரதியமைச்சர் எம்.சிவலிங்கம் அரசாங்கத்தைப் பாராட்டியோ அல்லது எதிர்த்தோ கருத்துக் கூற விரும்பாதவராகத் தனது உரையை நிகழ்த்தினார்.

எதிர்க்கட்சியினர் கூறும் திருததங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டு பிரஜாவுரிமை பற்றி இங்கு பேசப்பட்டாலும் எமது மக்களின் தேசிய அடையாள அட்டைகள் கூட இதுவரை முறையாக வழங்கப்படவில்லை எனக்கூறி மனம் நொந்துகொண்டார்.

அப்போது எங்க பக்கம் வாங்க... என எதிர்க்கட்சியிலிருந்து ஜே.வி.பியினர் குரல் எழுப்பினர்.

**அஸ்வர்**

அமைச்சர் அஸ்வர் விவாதத்திற்கு முத்தாப்பு வைப்பதைப் போன்று உரையாற்றினார்.

மலையக மக்களின் உரிமைகளைப் பறித்ததும் ஐக்கிய தேசியக் கட்சி அரசே. 1948இல் ஏற்பட்ட தவறு அதுவாகும்.

அதன் பின்னர் தவறுகள் திருத்திக்கொள்ளப்பட்டு, தோட்டத் தொழிலாளர்களின் பிரஜாவுரிமை மட்டுமலல, பல நலன்களையும்பேண வழிசமைக்கப்பட்டது என்றார். அவற்றை விவரிக்கவும் அவர் தவறவில்லை. அரசைக் காப்பாற்றி தனது அமைச்சர் பதவியையும் பாதுகாத்துக் கொள்வதற்காக அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானைப் "ப்ளீஸ்" பண்ணும் உரை இதுவாகும் எனக் குறிப்பிட்டார் ஜே.வி.பியின் எம்.பியான அநுர திஸாநாயக்க.'

'முறையாகப் பேசுபவர்கள் குறுக்கிட்டு விளக்கம் கோரலாம் - பைத்தியங்களை என்ன செய்வது?' எனக் கணை தொடுத்து அமர்ந்தார் அஸ்வர்.

இதன்படி விவாதம் மலைய மக்கள் விவகாரம் பற்றியது என்பதாலோ என்னவோ தினேஸ் குணவர்த்தன, விமல்வீரவன்ச போன்ற எதிர்க்கட்சியின் முன்வரிசை எம்.பிக்கள் பலரும் சபையில் இருக்கவில்லை. எதிக்கட்சித் தலைவர் மஹிந்தராஜ பக்ஷ பின்வரிசையில் சென்று அமர்ந்துகொண்டு தமது சகாக்களுடன் குஷாலாக ஏதேதோ பேசிக்கொண்டிருந்தார்.

நீதிஅமைச்சரும் சபை முதல் வருமான லொக்குபண்டாரா விவாதத்திற்கு பதிலளிக்கையில் முக்கியமாக ஒன்றைக் குறிப்பிட்டார்.

பிரஜாவுரிமை திருத்தச் சட்டத்தின் இரண்டாவது வாசிப்பினை மட்டுமே நிறைவேற்றிக் கொள்கிறோம். எதிர்க்கட்சியினா முன்வைத்துள்ள நாடற்றவர்கள் அனைவருக்கும் பிரஜாவுரிமை வழங்கப்பட 'வேண்டுமென்ற திருத்தத்தையிட்டு அரசு கவனம் கொண்டுள்ளது.

ஆகையால், அது பற்றி சட்டமா அதிபரிடம் கலந்துரையாடி மீண்டும் இதனை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதற்கு பிரதமமந்திரி விருப்பம் கொண்டுள்ளாரென அவர் கூறினார்.

நாடாளுமன்றம் இன்று கூடும் போது ஒஸ்லோ மாநாடு விவகாரம் பற்றி பிற்பகல் ஆறுமணி வரை விவாதிப்பதற்குத் தீர்மானிககப்பட்டுள்ளது.

# மலையக மக்களின் உரிமைகளை சகல மட்டங்களிலும் நிறைவேற்றுக!

## இரா.சம்பந்தன் எம்.பி. வேண்டுகோள்

நாடு சுதந்திரம் அடைந்தது முதல் இங்கு வாழும் தமிழ்பேசும் மக்களின் பிரச்சினைகள் முறையாகத் தீர்க்கப்படவில்லை. அதுவே பின்னர் ஆயுதப்போராட்டமாக மாறியது. போராட்டமின்றி, இந்நாட்டில் பிறந்த ஒருவருக்கு இலங்கையர் என்ற அந்தஸ்தை வழங்கும் திருத்தச்சட்டத்தை நாம் வரவேற்கிறோம்.

இந்திய வம்சாவளி மக்களுக்கு வாக்குரிமை மறுக்கப்பட்டது. அவர்களது வாழ்வுரிமைக்கு பல தடைகள் போடப்பட்டன. பிரஜாவுரிமை வழங்கப்படவில்லை. இது விடயத்தில் மலையக மக்களின் உரிமைகளைப் பேணும் சகல சட்டதிட்டங்களும் சபையில் நிறைவேற்றப்படுவது அவசியமாகும்.

பிரஜா உரிமை திருத்தச் சட்ட விவாதத்தில் உரையாற்றிய தமிழ் தேசிய கூட்டமைப்பு பிரதிநிதி இரா. சம்பந்தன் இவ்வாறு கூறினார்.

இந்நாட்டிற்காக உழைத்த மக்களது உரிமைகள் நீண்ட காலமாகப் பாதிக்கப்பட்டே வந்துள்ளன. இங்கு வாழும் அனைவரும் இந்நாட்டு மக்கள் என்ற நிலை வேறுபாடின்றி பேணப்படவேண்டும்.

இலங்கையில் வாழும் இந்திய மக்கள் பாதிக்கப்பட்டபோது, அவர்களது உரிமைகளுக்காக எஸ்.ஜே.வி.செல்வநாயகம் குரல் எழுப்பினார். தாம் சார்ந்திருந்த அகில இலங்கை காங்கிரஸ் கட்சியைவிட்டும் வெளியேறினார்.

அதன் பின்னரே அவரால் சமஷ்டிக் கட்சி உருவாக்கப்பட்டது. அது தமிழ் பேசும் மக்களின் நன்மைகளைப் பேணியது.

நாட்டில் ஜனநாயகம் அர்த்தமுள்ளதாக்கப்படவேண்டும். பல்வேறு பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களுக்கு அவர்களது மொழி, கலாசாரம், உரிமைகளைப் பேணுவதற்கான வழிவகைகளை அரசு அமைத்துக் கொடுப்பது அவசியமாகும.

அது சமஷ்டி முறையின்கீழ் சாத்தியமாகும் என்பதை உலக நாடுகள் பலவும் உணர்ந்து செயற்படுகின்றன. மறைந்த தலைவர் செல்வநாயகம் 1949ஆம் ஆண்டு முதல் சமஷ்டி ஆட்சி முறையை வலியுறுத்தியது நாட்டைப் பிரிப்பதற்காகவல்ல. நாட்டை இணைப்பதற்காகவே என்பதை இப்பொழுது பலரும் உணரத் தலைப்பட்டுள்ளனர்.

ஆயினும், ஜே.வி.பியினர் அதனைப் புறக்கணித்தே குரல் எழுப்புகின்றனர். சமஷ்டி ஆட்சிமுறை, பிரிவினைக்கு வித்திடும் என ஆவேசப் பிரசாரம் செய்கின்றனர்.

சமஷ்டடி ஆட்சி நடைமுறையிலுள்ள கனடா, ஜேர்மன், இத்தாலி, பெல்ஜியம், சுவிட்ஸர்லாந்து ஆகிய நாடுகள் பிரிக்கப்படவில்லை. சகல துறைகளிலும் அபிவிருத்தி கண்டுள்ளன - இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

(எ)

# நூலகங்களை நிறுவி அறிவை வளர்ப்பது சனசமூக நிலையங்களின் முக்கிய பணி!

## அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவிப்பு

சண்டிலிப்பாய்,ஜன.31

சனசமூக நிலையங்கள் ஒவ்வொன்றும் தத்தமது பகுதிகளில் நூலகங்களை ஆரம்பித்து மக்களின் பொதுஅறிவு விருத்திக்கு உதவ வேண்டும்.

அத்துடன் கலை, கலாசாரம் மற்றும் விளையாட்டுத்துறைகளின் விருத்தி கருதியும் சனசமூகநிலையங்கள் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் வலி. வடக்கு சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.ஞானவேல்ராசா.

அளவெட்டி மகாஜன சன சமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது. இந்தக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நிலையத் தலைவர் செ.வேலாயுத பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சன சமூக நிலையங்கள் கிராம அபிவிருத்தி சங்கங்களுடன் இணைந்து தமது பகுதியின் அபிவிருத்தி பணிகளிலும் ஈடுபடவேண்டும்.

குறிப்பாக சிரமதான மூலம் சில பணிளை தமது கிராமத்துக்கு ஆற்ற வேண்டிய பொறுப்பும் இந்த நிலையங்களுக்கு உண்டு.

1992ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த சனசமூகநிலையம் இப்பகுதியில் பல்வேறு சமூக சேவைகளில் நீண்டகாலமாக ஈடுபட்டுவந்ததை முக்கியமாகக் குறிப்பிடவேண்டும்.

கடந்தகால போர் அனர்த்தங்களினால் பெரிதும் பாதிக்கப்பட்ட மேற்படி நிலையக் கட்டடத்தை மக்களின் பங்களிப்புடன் புனரமைப்பு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள நிலைய நிர்வாகம் தீர்மானித்திருப்பது மகிழ்ச்சிக்குரியது - என்றார்.

(எ-135)

# சுன்னாகம் மருந்தகம் 6 நாள்கள் இயங்கும்

சண்டிலிப்பாய்,ஜன.31

சுன்னாகம் அரசினர் மத்திய மருந்தகம் இனிமேல் வாரத்தில் 6 நாள்கள் இயங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இந்த மருந்தகம் வாரத்தில் திங்கள், புதன், வெள்ளி ஆகிய தினங்களில் மட்டுமே இயங்கிவந்தது.

இம்மருந்தகத்தின் பொறுப்பதிகாரியான டாக்டர் ஆ.திருநாவுக்கரசு, வாரத்தில் செவ்வாய், வியாழன், சனி ஆகிய தினங்களில் தொல்புரம அரசினர் மத்திய மருந்தகத்தில் பதில் கடமையாற்றி வந்தார். இதனால், சுன்னாகம் மருந்தகத்தில் 3 நாள்கள் மட்டுமே பணியாற்ற முடிந்தது.

தற்போது தொல்புரம் அரசினர் மத்திய மருந்தகத்துக்கு டாக்டர் வி.மகேந்திரன் இடமாற்றம்பெற்று வந்துள்ளார்.

இதனால், வாரத்தில் 3 நாள்கள் மட்டுமே இயங்கி வந்த சுன்னாகம் மற்றும் தொல்புரம் மருந்தகங்கள் இனித் தொடர்ந்து வாரத்தில் 6 நாள்கள் செயற்படும் எனக் கூறப்படுகிறது. (ஒ-135)

# சேவையினைப் போற்றுகின்றோம்



ஆறு ஆண்டுகளாக தெல்லிப்பழை பிரதேச
செயலராக இருந்து அரும்பெரும் சேவையாற்றி
யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபராக
பதவி உயர்வு பெற்றுச்சென்றுள்ள

**திருமதி ப.திலகநாயகம்**

அவர்களையும்



நிர்வாக உத்தியோகத்தராக இருந்து
உதவிப் பிரதேச செயலராக நியமனம் பெற்ற

**திரு.கா.பீதாம்பரம்**

அவர்களையும் மேலும் பல
சிறப்புகள் பெற வாழ்த்துகின்றோம்.

**நலன்புரிச் சங்கம்.**
பிரதேச செயலகம், தெல்லிப்பழை.

(13904)

## அறிவித்தல்

### வரிமதிப்பு அறிவித்தல் - 2003

**யாழ். மாநகரசபை எல்லைக்குள் வதியும் நிரந்தரக் குடியிருப்பாளர்கள் தத்தமது குடியிருப்புக்களிலிருந்து இடம் பெயர்ந்திருந்தால் 2003ஆம் ஆண்டுக்கான வரிமதிப்பு அறிவித்தல் படிவத்தை யாழ். மாநகரசபை சோலைவரிப் பகுதியில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.**

*மாநகரசபை,*
*யாழ்ப்பாணம்.*
*2003.01.30*

(சி-26289)

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன் சுப்பிரமணியம் அரசரத்தினம்
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி பாக்கியம் சுப்பிரமணியம்**

அவர்கள் (29.01.2003)அன்று காலமான செய்தியறிந்து மிகவும் துயரமடைகின்றோம். இவரின் இழப்பால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பேராதனைப்*
*பல்கலைக்கழகம்.*

(13909)

பொறியியல் பீட
இறுதிவருட மாணவர்கள்

## உள்ளகப் பயிற்சி மருத்துவர் நியமனம்

யாழ்ப்பாணம்,ஜன.31

யாழ்.போதனா வைத்தியசாலையில் 16 உள்ளகப் பயிற்சி மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நியமனங்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட இறுதியாண்டுப் பரீட்சையில் சித்தியெய்திய 50 பேரில் 16பேர் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றுவதற்கு விருப்பம் தெரிவித்திருந்தனர். இதனையடுத்து இவர்களுக்கு இந்த நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. (ஓ-8-139)

## சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் உணவு விநியோகம்

சாவகச்சேரி ஆஸ்பத்திரி நோயாளர்களுக்கும் ஊழியர்களுக்கும் உணவு வழங்கும் பணி ஆரம்பிக்கப்படவுள்ளது.

பாத்திரங்கள் உட்பட ஆஸ்பத்திரியின் சமையலுக்கு வேண்டிய அனைத்து பொருள்களும் யாழ்.சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனையினால் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் ஏனைய ஆஸபத்திரிகளில் தற்காலிகமாக கடமையாற்றும் இவ் ஆஸ்பத்திரி ஊழியர்களில் சிலர் இவ்ஆஸ்பத்திரியில் கடமைகளைப் பொறுப்பேற்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளது. யுத்த அனர்த்தங்களின் போது ஆஸ்பத்திரி சமையலறைப் பாத்திரங்கள் உட்பட அனைத்து பொருள்களும் சேதமடைந்தும் காணாமல்போயுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## நல்லூரில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.31

யாழ்.மாநகரசபைப் பிரதேசத்தில் இயங்கும் சன சமூக நிலைய நிர்வாகிகளுக்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் இயங்கும் சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர், நிர்வாக உறுப்பினர்கள் ஆகியோரைக் கலந்துகொள்ளுமாறு அரசியல் துறையின் யாழ்.நல்லூர் கோட்டப் பிரிவினர் கேட்டுள்ளனர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சுப்பிரமணியம் பாக்கியம்

காரைநகர், களபூமி, பாலாவோடையைப் பிறப்பிடமாகவும் தற்பொழுது கலேவெலயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் பாக்கியம் அவர்கள் கடந்த (29.01.2003) புதன்கிழமை காலமானார்.

அன்னார் கனகசபை சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திரு. திருமதி மார்க்கண்டு சுந்தரம்மாவின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு. திருமதி கனகசபை வள்ளியம்மையின் அன்பு மருமகளும், அன்னலட்சுமி, மார்க்கண்டு (London), மனோகரன் (Monoj Express G.S.A.Serendib Air line (Lion air Mano), 67A, ஆட்டுப்பட்டித தெரு கொழும்பு - 13, இல. 13, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம், மார்க்கண்டு ஸ்ரோர்ஸ் கலேவெல), தனலட்சுமி, அரசரத்தினம் (இறுதி யாண்டு மாணவன் பொறியியற் பீடம் பேராதனை) ஆகியோரின் அன்புத் தாயாரும், அன்னம்மா, பாலசுப்பிரமணியம், இராமநாதன், மயில்வாகனம் (மார்க்கண்டு அன் சன்ஸ் கிளிநொச்சி, வவுனியா), செல்லம்மா (London), தையல்நாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், நடராசா, இராஜேஸ்வரி, சந்தானலட்சுமி, சோமசேகரம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 2.2.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் காரைநகரில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி-26288)

தகவல்:
சு.மனோகரன் (மகன்)

## திருமதி பூரணம் அம்பகர்

கொக்குவில் கிழக்கு, 224, சபாபதி வீதி, தலையாழியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பூரணம் அம்பகர் அவர்கள் 26.01.2003 அன்று கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற அம்பகரின் (கொந்துராத்துக்காரர், பலாங்கொடை) அன்பு மனைவியும் நடராஜா, பூமணிதேவி, காலஞ்சென்றவர்களான கனகம்மா, சோதிப்பிள்ளை, வேலாயுதபிள்ளை, செல்லத்துரை, மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சொர்ணபூசனி (கனடா), தவரோஜினி (இங்கிலாந்து), **Dr.** சிவானந்தன் (இங்கிலாந்து), **Dr.**மகாரோஜினி (இங்கிலாந்து), பரமானந்தன் (இங்கிலாந்து), காலஞ்சென்றவர்களான தனபூசனி, இரத்தின பூசனி, கருணாகரன் ஆகியோரின் சிறிய தாயாரும் லோகேஸ்வரன் (இங்கிலாந்து), சிறிதரன் (இங்கிலாந்து), ஆனந்தஜோதி, மதிவதனி ஆகியோரின் பெரிய தாயாரும் புவனேஸ்வரன் (ஜேர்மனி), இராஜமோகன் (கென்யா), இரட்ணராணி (இங்கிலாந்து), **Dr.**இராஜயோகன் (இங்கிலாந்து), மல்காந்தி, கிருஷாந்தி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.02.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00மணிக்கு கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் நடைபெற்றுப் பி.ப. 2..00மணியளவில் பூதவுடல் கல்கிசை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சபாபதி வீதி,*
*கொக்குவில்.*

(13901)

தகவல்:
அ.ஆனந்தஜோதி (ராஜன்)
(பேரமகன்)


பனைவளம் மிக்க யாழ் மண்ணில்
உலகத்தரம் மிக்க உன்னத சாதனங்கள்

SHARP
ஜப்பானில் இருந்து....

பிறவுண்ஸ்
வாடிக்கையாளர்களுக்காக




பிறவுண்ஸ் இலத்திரனியல் பிரிவு...
ஷாப் மற்றும் ஏனைய உலகத் தரமிக்க வீட்டுப் பாவனை மின்னியல் உபகரணங்களை வழங்குகிறது.

பிறவுண்ஸ் விவசாயப் பிரிவு...
இரண்டு சக்கர மற்றும் நான்கு சக்கர உழவு இயந்திரங்களையும் விவசாய உபகரணங்களையும் வழங்குகிறது.

பிறவுண்ஸ் மிருக வளர்ப்புப் பிரிவு...
உங்கள் வளர்ப்புப் பிராணிகளுக்குத் தேவையான மருந்து வகைகள் அனைத்தையும் வழங்குகிறது.

பிறவுண்ஸ் இரும்புப் பொருட்கள் பிரிவு...
உங்களுக்குத் தேவையான உறுதிமிக்க இரும்பு வகைகளை வழங்குகிறது.

பணத்திற்கேற்ற பெறுமதி.

TNT Grafix

Browns
Group of Companies

இல. 89, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021-2225150

# 'டெங்கு' நோய் பரப்பும் நுளம்பு காலையிலும், மாலையிலும் உலாவும்

**குடாநாட்டில் நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகள் தீவிரமடைந்திருக்கிறது. டெங்கு மற்றும் நுளம்புகளால் பரவும் நோய்கள் பற்றிய விழிப்புணர்வைத் தருகின்ற கட்டுரை இது.**

தென் இலங்கையில் மிக வேகமாகப் பரவிவந்த இந்நோய், தற்போது யாழ்.குடாநாட்டிலும் பரவ ஆரம்பித்துள்ளது. இத்தகைய சில நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதைப் பத்திரிகை வாயிலாக நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

எனவே, இந்நோயிலிருந்து பாதுகாப்பைப்பெற சில முக்கிய தகவல்களை நீங்கள் அறிந்திருக்க வேண்டும் என்பதே இப்பிரசுரத்தின் நோக்கமாகும்.

**ஆதலால் நீங்கள் விழிப்பாக இருங்கள்! அதற்குப் பின்வரும் தகவல்களை நீங்கள் அறிந்திருக்க வேண்டும்.**

★ டெங்குக் காய்ச்சல் ஒருவகை வைரஸ் கிருமிகளால் உருவாகும் நோயாகும்.

★ ஈடிஸ் இன இருவகை நுளம்புகள்மூலம் இந்நோய் பரப்பப்படுகின்றது.

★ டெங்கு நோயாளியைக் கடித்து குருதியை உறுஞ்சும்போது நுளம்புகள் குருதியை உள்ளெடுக்கின்றன. அதன்பின்னர், சுகதேகி ஒருவரைக் கடிக்கும்போது டெங்கு வைரஸ் கிருமிகளை அவரது உடம்பினுள் செலுத்துகின்றன.

★ வைரஸ்கிருமிகள் ஒருவரின் உடம்பினுள் சென்று 4-6 நாள்களில் டெங்குக் காய்ச்சல் ஏற்படும்.

★ காலை 6-8 மணி, மாலை 4-7 மணிவரையுள்ள நேரங்களில் இந்நுளம்பு மனிதரை அதிகமாகக் கடிக்கும்.

★ ஒருமுறை இக்கிருமிகளை உள்ளெடுத்த இந்நுளம்பு அதன் வாழ்க்கைக் காலம் முழுவதும் இவ்வைரஸைக் காவும் ஆற்றல் கொண்டிருக்கும்.

*டெங்குக் காய்ச்சல் நோயை அதன் தாக்கத்தின் அடிப்படையில் மூன்று நிலைகளாகப் பிரித்துக் குறிப்பிடலாம்.*

★ சாதாரண டெங்கு.
★ குருதிப் பெருக்கு டெங்கு.
★ குருதிச் சுற்றோட்ட அதிர்ச்சி டெங்கு.

*சாதாரண டெங்குக் காய்ச்சலின் குணங் குறிகளாவன:-*

★ சடுதியாக ஏற்படும் கடும் காய்ச்சல்.
★ முன் நெற்றியில் அதிகம் உணரப்படும் தலையிடி.
★ கண்கள் சிவப்பு நிறமாகுதல்.
★ கண்களுக்குப் பின்னால் நோ.
★ தசைகள் மூட்டுக்களில் நோ.
★ சில வேளைகளில் முகம், கை, கால்கள், உடம்பின் முற்பகுதியில் சிவந்த பருக்கள் தோன்றுதல்.
★ ஓங்காளம், வாந்தி.
★ தோல், வாய், நாக்கு போன்ற பகுதிகளில் சிவந்த புள்ளிகள் தோன்றுதல்.
★ நெறி போடுதல்.
★ வலது பக்க வயிற்றில் நோ.

சாதாரண நிலையில் 4-5 நாள்களில் இக்குணங் குறிகள் தணிந்து நோய் குணமாகும். எனினும், சிலருக்கு அடுத்த நிலையாகிய இரத்தப் பெருக்குடன் கூடிய டெங்குக் காய்ச்சல் உருவாகும். இதன் அறிகுறிகளாவன:-


★ முரசு, மூக்கிலிருந்து குருதி வெளியேறுதல்.
★ அரிதாகக் கண்களிலிருந்தும் குருதி வெளியேறலாம்.
★ முகம் முன்பகுதியில் இளம் சிவப்புப் புள்ளிகள் தோன்றல்.
★ தொடர்ச்சியான வயிற்றுக் குத்து.
★ கோப்பி நிறத்திலான வாந்தி.
★ மலத்துடன் குருதி வெளியேறுதல்.
★ மாதவிடாயின்போது அதிக குருதி வெளியேறல்.
★ தோலுக்கு அடியிலான குருதிப் பெருக்கம் ஏற்படல்.
★ சிறு நீர்மூலம் குருதி வெளியேறல்.

**இதனைத் தொடர்ந்து குருதிச் சுற்றோட்ட அதிர்ச்சியுடனான டெங்குக் காய்ச்சல் உருவாகும். இதன் குணங்குறிகளாவன:-**

★ காய்ச்சல் அற்ற நிலை.
★ உடம்பு குளிர்ந்து வெளிறுதல்.
★ வாயின் சுற்றுப்புறம் நீல நிறம் ஆகுதல்.
★ அமைதியற்ற சோர்வு நிலை.
★ சுவாசம் வேகமாகவும், ஆழமற்றதாகவும் காணப்படல்.
★ மூச்சுவிடச் சிரமப்படல்.
★ சிறு நீரகம், இதயம், ஈரல், சுவாசத்தொகுதி, மூளை தாக்கமடைதல்.

இந்நிலையே தீவிர டெங்கு அதிர்ச்சி நிலை ஏற்படும்.

தீவிர மருத்துவ சிகிச்சை அளிக்



கப்படாவிடில் 12-24 மணித்தியாலத்தில் இறப்பு ஏற்படும் அபாயம் உண்டு.

2ஆம், 3ஆம் நிலைகள் ஆபத்தானவை. உடனடி வைத்திய பராமரிப்பு மிகமிக அவசியம்.

## தடுப்புமுறைகள்

நுளம்பு உற்பத்தியை கட்டுப்படுத்துதல் மிகவும் பிரதானமாகும். குறிப்பாக டெங்குக் காய்ச்சலைப் பரப்பும் நுளம்புகள் நன்னீரில் முட்டை இடுகின்றன. எனவே, பின்வரும் இடங்களில் மழைநீர், கிணற்று நீர் தேங்குவதைத் தவிர்த்தல் அவசியம்.

★ நீர் தேங்கும் சிறு குட்டைகள்.
★ பாத்திரங்கள்.
★ ரின்கள்.
★ பானைகள், சட்டிகள், மூடப்படாத நீருள்ள கொள்கலன்கள்.
★ சிரட்டைகள், கோம்பைகள்.
★ பொலித்தீன்கள்.
★ மரங்களின் பொந்துகள், பிளவுகள்.
★ நீருள்ள பூச்சாடிகள்.
★ தாழ்வார பீலிகள்.
★ எறும்பு ஏறாமல் மேசைக் காலகளுக்கு வைக்கும் நீருள்ள பாத்திரங்கள்.
★ மீன்வளர்ப்புத் தொட்டிகள்.
★ கால்நடைகளுக்கான நீர் வைக்கும் பாத்திரங்கள்.

மேற்கூறியவற்றை விட மேலும் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளாவன:-

★ வீட்டைச் சுற்றிலும் குறைந்தது 500மீற்றர் சுற்றளவில் உள்ள புல், பூண்டுகள், இருண்ட பற்றைகள், பற்றைகளில நுளம்புகள் தங்குவதால் இவற்றை அழித்தல் வேண்டும்.

★குப்பை கூளங்களைப் புதைத்தல், அல்லது எரித்தல்.

★ ஆள்கள் அற்ற அயல் வீடுகள், வெற்றுக் காணிகளை துப்புரவு செய்தல்.

★ வீட்டுக்குள்ளே இருக்கும் தளபாடங்களுக்கு அடியிலும், சப்பாத்துக்களின் உள்ளேயும், ஆடைகள் அதிகம் காணப்படும் இடங்களிலும் நுளம்புகள் காணப்படுவதால் வீட்டை ஒழுங்காகவும் சுத்தமாகவும் பேணுதல்.

*நுளம்பு உற்பத்தியைத் தடுப்பதற்கு மேற்கொள்ளக்கூடிய தனிநபர் பாதுகாப்பு நடவடிக்கைகளாவன:-*

★பற்றைகள், புல்பூண்டுகளில் இவ்வகை நுளம்புகள் தங்குவதாலும், இவை மனிதரைக கடிக்கும் நேரம் பெரும்பாலும் காலை 6-8மணி மாலை 4-7மணி என்பதாலும் இந்நேரங்களில் வெளியில் உலாவுவதை இயன்றளவு தவிர்க்கவும்.

★நீளமான கையுடைய உடைகள், கால் சட்டைகள், கால் உறைகள அணிதல்.

★நுளம்புகள் உள்ளே புகா மல் யன்னல்களில் வலைகளைப் பொருததுதல்.

★ சிறுவர்கள் அதிகமாகப் பாதிக்கப்படக் கூடியவர்களா தலால் அவர்கள் மீது அதிக கவனம் செலுத்துதல்.

## நோயாளியின் பராமரிப்பு, பாதுகாப்பு நடவடிக்கைகள்

★மேலே குறிப்பிடப்பட்ட குணங்குறிகள் தென்படின் காலதாமதமின்றி தகுந்த பராமிப்பைப் பெறல் அவசியம்.

★ நோயாளியைத் தனிமைப்படுத்துதல் நன்று.

★ நோயாளியைப் பூரணமான ஓய்வு பெறச்செய்தல்.

**து.மகாதேவன்**
**பொதுச் சுகாதாரப் பரிசோதகர்**
**யாழ். மாநகரசபை**

★ நீர் ஆகாரங்கள் இலகுவில் சமிபாடடையும் போசாக்கான உணவுகளைக் கொடுத்தல்(உதாரணம பால், முட்டை, இட்லி, பழச்சாறு)

★ காய்ச்சல் ஏற்பட்டு முதல் 4 நாள்கள்வரை நோயாளியை நுளம்பு கடிக்காமல் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளல்.

★ வைத்திய ஆலோசனை இல்லாமல் மருந்துகள் உட்கொள்வதைத தவிர்த்தல். (உதாரணம்:- டிஸ்பிறின், அஸ்பிறின்).

★காய்ச்சலைத் தணிப்ப தற்கு பனடோல் உரிய அளவில் கொடுத்தல் எனவே,

★ நுளம்பைக் கட்டுப்படுத்த சூழலை நன்கு பராமரியுங்கள்.

★ நோயாளியை உரிய விதத்தில் பராமரியுங்கள். தகுந்த சிகிச்சை பெறச் செய்யுங்கள்.

★ தனிநபர் பாதுகாப்பு நடவடிக்கைகளைக் கவனமாகப் பேணுங்கள்.

*விழிப்பாய் இருப்பீர்! டெங்கினைத் தடுப்பீர்!.* ★


## காணி தேவை

சுற்றுலா விடுதி அமைக்கக் கூடிய காணி காரைநகர், கசூரினா பீச்சை அண்டிய பகுதியில் உடன் தேவை.

தொடர்பு:
மு.மயில்வாகனம் (இளைப்பாறிய கிராம சேவையாளர்)
588/2, நாவலர் வீதி, அரியாலை,
(ஸ்ரான்லி கல்லூரி முன் ஒழுங்கை)
T.P: 0777-201636.
(13897)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



இணுவில் மேற்கு (J/191)
கிராம உத்தியோகத்தர்
திரு:க.இரவீந்திரன்
அவர்கள் கிராம உத்தியோகத்தர் தரம்·I இற்கு பதவியுயர்வு அடைந்ததையிட்டு எமது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

தா.மகாதேவக்குருக்கள்
சோ.சிவபாலன்
குடும்பத்தினர்.

காயத்திரி பீடம்,
இணுவில் மேற்கு.
(13892)

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி அருணாசலம் தங்கம்மா

(நாவலடி,புலோலி மத்தி)

எமது பிரதேச செயலகத்தில் கிராம அலுவலராகக் கடமையாற்றும் திரு. அருணாசலம் உமாசங்கர் மற்றும் எழுதுநராகக் கடமையாற்றும் திருமதி உதயமதி சதீஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயாராகிய திருமதி அருணாசலம் தங்கம்மா அவர்களின் மரணச் செய்தி அறிந்து அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அவரின் பிரிவால் துயரடைந்திருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
வடமராட்சி வடக்கு,
பருத்தித்துறை.
(13899)

பிரதேச செயலரும்,
நலன்புரிச்சங்க
உத்தியோகத்தர்களும்,
ஊழியர்களும்

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 2383501 இருந்து
2402851 வரை
சீட்டிழுப்பு இல. 1371
திகதி 29.01.2003

வெற்றி எண்கள்
01 12 28 33 48

போனஸ் எண்
46

ஜக்பொட் பரிசு
ரூபா 1,500,000/- வெல்லப்பட்டது.

| பொருந்திய எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத்தொகை | தொகை |
|---|---|---|---|
| 5 | 01 | 1,500,000/- | 1,500,000/- |
| 4 எண்களுடன் போனஸ் எண் | 02 | 100,000/- | 200,000/- |
| 4 | 117 | 10,000/- | 1,170,000/- |
| 3 | 6,204 | 500/- | 3,102,000/- |
| 2 | 101,736 | 20/- | 2,034,720/- |
| சீட்டிழுப்பில் ஆகக்குறைந்த 01ம் எண் (போனஸ் எண் தவிர்த்து) | 124,874 | 10/- | 1,248,740/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூபா.8,255,460/-

இந்த சனிக்கிழமைக்கான ஜக்பொட்
ரூபா 1,500,000/-

தொடர் இல. 3381872க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுகள் 2003 பெப்ரவரி 01ம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 3 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென்ற் மைக்கேல் வீதி,
கொழும்பு 3.

யாழ்ப்பாணத்தில் : விநியோகஸ்தர்,
34, கந்தப்பசேகரம் வீதி,
(பஸ் நிலையம் முன்பாக),
யாழ்ப்பாணம்.

சனிக்கிழமை அதிர்ஷ்ட சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுகளில் தங்கப்பரிசு வெற்றி பெறும் 5 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

2386654-9-03
2395670-6-20
2391956-5-56
2385833-0-77
2390867-3-19

PHOENIX O&M

# உலகக் கிண்ண கிரிக்கெட் ஆட்டத்தை குரெஞ்யேயுக்கு அர்ப்பணிக்கிறேன்!

## தென்னாபிரிக்க வீரர் டொனால்ட் தெரிவிப்பு

"உலகக் கிண்ணப் போட்டியில் எனது ஆட்டத்தை தென்னாபிரிக்க அணியின் மறைந்த முன்னாள் தலைவர் ஹன்சி குரெஞ்யேயுக்கு அர்ப்பணிக்கிறேன்.

- இவ்வாறு அலன் டொனால்ட் தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் தென்னாபிரிக்க அணியின் பந்துவீச்சாளரான அலன் டொனால்ட கலந்துகொள்கின்றார்.

டொனால்ட் கலந்துகொள்ளும் கடைசி உலகக் கிண்ணப் போட்டி இதுவாகும், இத்தொடரில் தன்னுடைய ஆட்டத்தை தென்னாபிரிக்க அணியின் முன்னாள் தலைவர் மறைந்த ஹன்சி குரெஞ்யேயுக்கு அர்ப்பணிப்பதாக டொனால்ட் கூறியுள்ளார்.

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளின்போது குரெஞ்யேயை கௌரவிக்க வேண்டும் என்று சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலையும், தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையையும் டொனால்ட் கேட்டிருந்தார். ஆனால், டொனால்டின் வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

சூதாட்ட தரகர்களிடம் இருந்து பணம் பெற்றதை குரெஞ்யே ஒப்புக் கொண்டதால் அவருக்கு கிரிக்கெட் விளையாட ஆயுள்காலத் தடை விதிக்கப்பட்டது. குரெஞ்யேயுக்கு தடை விதிக்கப்பட்டதற்கும், அவரை இழந்தமைக்கும் பிறரை விட தான் மிகவும் கவலையடைவதாகவும் டொனால்ட் கூறியுள்ளார். இது குறித்து டொனால்ட் மேலும் கூறுகையில்:-

"சில அதிகாரிகள் குரெஞ்யேயை ஒரு கொலைகாரனை நடத்துவது போல நடத்தினர். வாய்ப்பு கிடைக்கும் போதெல்லாம் அவரை பாதாளத்தில் தள்ளிவிட முயற்சித்தனர்.

ஆனால், குரெஞ்யேயுடன் விளையாடியவர்கள் அனைவரும் அவர் மீது அதிக மதிப்பை வைத்திருக்கின்றனர். உலகக் கிண்ணத்தின் போது அவரை கௌரவப்படுத்தாது விடுவது வெட்கக் கேடானது. தென்னாபிரிக்காவின் மிகச் சிறந்த கிரிக்கெட் வீரர்களில் அவரும் ஒருவர் - என்றார். (ஒ-5)



உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் கலந்துகொள்ளும் இந்திய அணி தென்னாபிரிக்கா சென்றடைந்துள்ளது. அங்கு தென்னாபிரிக்க ரசிகர் ஒருவர் சச்சின் டெண்டுல்கரிடம் துடுப்பாட்ட மட்டையில் கையெழுத்து வாங்கியபோது எடுக்கப்பட்ட படம்.

## இன்றைய ஆட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.31

பருத்தித்துறை உதைபந்தாட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 4.00 மணிக்கு அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் கரணவாய் மத்தி விளையாட்டுக்கழகமும் வல்வை ஆதிசக்தி விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. (ஒ-5)

# உலகக் கிண்ணக் கிரிக்கெட்டில் ஆஸி.அணிக்கே அதிக வெற்றிகள்!

இதுவரை நடைபெற்றுமுடிந்த உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் ஆஸ்திரேலிய அணி கூடுதலான வெற்றி பெற்று முதலிடத்தில் உள்ளது.

இவ்வணி 47 போட்டிகளில் பங்குபற்றி 29 போட்டிகளில் வெற்றியையும் 17 போட்டிகளில் தோல்வியையும் சந்தித்துள்ளது.

இலங்கை அணி இப்பட்டியலில் எட்டாவது இடத்தில் உள்ளது. 36 போட்டிகளில் பங்குபற்றிய இவ்வணி 12 போட்டிகளில் மட்டுமே வெற்றிபெற்றுள்ளது.

1996 ஆம் ஆண்டு உலகக்கிண்ணத்தொடரில் இலங்கை அணி பங்குபற்றிய சகல போட்டிகளிலும் வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை நடைபெற்று முடிந்த 7 உலகக் கிண்ணத் தொடர்களிலும பங்குபற்றிய அணிகள் பெற்ற வெற்றி, தோல்விகள் விவரம் வருமாறு:-

| அணி | போட்டி | வெற்றி | தோல்வி | முடிவுற்றமை | சமநிலை | சம்பியன் |
|---|---|---|---|---|---|---|
| ஆஸ்திரேலியா | 47 | 29 | 17 | - | 1 | 2 |
| மேற்கிந்திய தீவுகள் | 42 | 28 | 14 | - | - | 2 |
| இங்கிலாந்து | 45 | 28 | 16 | 1 | - | - |
| பாகிஸ்தான் | 47 | 27 | 19 | 1 | - | 1 |
| நியூசிலாந்து | 44 | 23 | 20 | 1 | - | - |
| இந்தியா | 44 | 22 | 21 | 1 | - | 1 |
| தென்னாபிரிக்கா | 24 | 16 | 7 | - | 1 | - |
| இலங்கை | 36 | 12 | 23 | 1 | - | 1 |
| சிம்பாவே | 34 | 6 | 26 | 2 | - | - |
| பங்களாதேஷ் | 5 | 2 | 3 | - | - | - |
| கென்யா | 11 | 1 | 9 | 1 | - | - |
| ஐ.அரபு எமிரேட்ஸ் | 5 | 1 | 4 | - | - | - |
| நெதர்லாந்து | 5 | - | 5 | - | - | - |
| கனடா | 3 | - | 3 | - | - | - |
| கிழக்கு ஆபிரிக்கா | 3 | - | 3 | - | - | - |

## இந்திய வீரர்களிடம் ஊக்க மருந்து சோதனை

உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் பங்கேற்கும் இந்திய வீரர்கள் மீது இரண்டாவது முறையாக மீண்டும் ஊக்க மருந்து பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நியூசிலாந்தின் ஆக்லாந்தில் கடந்த 10ஆம் திகதி முதல்முறையாக ஊக்க மருந்து பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது வீரர்கள் எவரும் ஊக்க மருந்து பாவித்ததற்கான அறிகுறிகளில்லையென அறிவிக்கப்பட்டது.

எனினும், முன்னெச்சரிக்கையாக மீள பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதுமட்டுமல்லாது போட்டியில் பங்குபற்றும் சகல அணிகளின் வீரர்களுக்கும் போட்டியின் நடுவே மீள ஒருமுறை சோதனை மேற்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

## குருநகர் வி.க. கபடி போட்டியில் சம்பியன்

யாழ்ப்பாணப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பதிவுசெய்த கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்ட கபடி சுற்றுப்போட்டியின் ஆண், பெண் இருபாலாருக்குமான இறுதி ஆட்டத்தில் குருநகர் விளையாட்டுக் கழகம் வென்று இவ்வாண்டுக்கான சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

கடந்த 25ஆம் திகதி துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் குருநகர் விளையாட்டுக்கழகம் திருநகர் பாரதி விளையாட்டுக் கழகத்தை 45-17 என்ற புள்ளி அடிப்படையில் வென்று சம்பியனாகியது.

அதன் பின் நடைபெற்ற பெண்களுக்கான இறுதியாட்டத்தில் குருநகர் விளையாட்டுக் கழகம் பமிலியன் விளையாட்டுக்கழகத்தை பாரிய புள்ளி வித்தியாசத்தில் வென்று சம்பியனாகியது.

அதேவேளை கடந்த 23ஆம் திகதி நடைபெற்ற பெண்களுக்கான கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் யுத் காமல் விளையாட்டுக்கழகம் சென் றோக் விளையாட்டுக்கழகத்தை 2-1 என்ற செற் கணக்கில் வென்று சம்பியனாகியது. (ம-5)

# ஊழல் இல்லாத உலகக் கிண்ணம் ஒரு நாளும் சாத்தியம் இல்லை

## பாக். முன்னாள் வீரர் தெரிவிப்பு

கராச்சி,ஜன.31

"ஊழல் இல்லாமல் உலகக் கிண்ணம் நடைபெறவே முடியாது".

- இவ்வாறு பாகிஸ்தானின் முன்னாள் வேகப் பந்துவீச்சாளர் சர்.'. பிராஸ் நவாஸ் கூறியுள்ளார்.

போட்டியின் முடிவை முன்கூட்டியே நிர்ணயிப்பதற்குப் பணம் வாங்கியதை தென்னாபிரிக்க முன்னாள் தலைவர் குரெஞ்யே ஒப்புக் கொண்டதைத் தொடர்ந்து ஊழல் தடுப்பு அமைப்பை ஐ.சி.சி. நிறுவியது.

2003 உலகக் கிண்ணத்தில் ஊழலுக்கு இடம் இல்லை என கடந்த மாதம்தான் ஐ.சி.சி அறிவித்தது.

இந்நிலையிலேயே நவாஸ் மேற்கண்டவாறு கூறினார்.

"ஆட்டத்தின் முடிவை முன்கூட்டியே நிர்ணயிக்கும் கும்பல்கள் படு சுறுசுறுப்பாக உள்ளன. குளிரூட்டப்பட்ட அறையில் அமர்ந்துகொண்டிருக்கும் அதிகாரிகளால் இத்தகைய மா'.பியா கும்பல்களை அடையாளம் காணமுடியாது.

முடிவுகள் எப்படி முன்னரே நிர்ணயிக்கப்படுகின்றன என்பதை முன்னாள வீரர்களால் மட்டுமே கண்டுபிடிக்க முடியும் என்றார் அவர்.

சர்.'பிராஸ் நவாஸ், 55டெஸ்ட்களிலும் 45 ஒரு நாள் போட்டிகளிலும் விளையாடியுள்ளார். (ஒ-5)



உலகக் கிண்ண கிரிக்கெட்



# உலகக் கிண்ணக் கிரிக்கெட் இன்னும் எட்டு நாள்களில்!

## மொத்த ஓட்ட எண்ணிக்கையில் இலங்கை சாதனை

உலகக் கிண்ணக் கிரிக்கெட்டில ஒரே போட்டியில் ஆகக் கூடுதலான ஓட்டங்களைப் பெற்ற அணி எனும் பெருமை இலங்கைக்கே உரியது.

1996 இல் கண்டியில் நடைபெற்ற கென்ய அணிக்கெதிரான போட்டியில இலங்கை 398 ஓட்டங்களைப் பெற்றது.

ஆனால் அடுத்த உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணிக்கெதிராக இந்தியா 373 ஓட்டங்களைப் பெற்றது. இது ஆகக் கூடுதலான மொத்த ஓட்டஎண்ணிக்கையில இரண்டாவது இடம் வகிக்கிறது.

1975 முதல் 1999 வரை நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளில் ஆகக் கூடுதலான ஓட்டங்களைப் பெற்ற அணிகள் விவரம் பின்வருமாறு :-

| அணி | ஓட்டம் | எதிரணி |
|---|---|---|
| இலங்கை | 398-5 | கென்யா |
| இந்தியா | 373-6 | இலங்கை |
| மே.இ. தீவுகள் | 360-4 | இலங்கை |
| பாகிஸ்தான் | 338-5 | இலங்கை |
| இங்கிலாந்து | 334-4 | இந்தியா |
| இங்கிலாந்து | 333-9 | இலங்கை |
| பாகிஸ்தான் | 330-6 | இலங்கை |
| இந்தியா | 229-2 | கென்யா |
| தென்னாபிரிக்கா | 328-3 | நியூசிலாலந்து |
| ஆஸ்திரேலியா | 328-5 | இலங்கை |

# போட்டி நடக்கும் இடங்களை மாற்றுவதற்கு ஐ.சி.சி. மறுப்பு

உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் சிம்பாவேயில் நடைபெறவுள்ள ஆட்டங்களை எக்காரணம் கொண்டும் தென்னாபிரிக்காவுக்கு மாற்றமுடியாது என ஐ.சி.சி. கூறிவிட்டது.

உலகக் கிண்ணப் போட்டியில் சிம்பாவேயில் நடைபெறவுள்ள ஆட்டங்களை தென்னாபிரிக்காவுக்கு மாற்றுமாறு பல முன்னணி நாடுகள் ஐ.சி.சியை நிர்ப்பந்தித்து வருவதையடுத்தே ஐ.சி.சி. இவ்வாறு மறுப்பு தெரிவித்துள்ளது.

தென்னாபிரிக்கா, கென்யா, மற்றும் சிம்பாவே ஆகிய நாடுகளில் போட்டிகளை நடத்துவதற்கு ஏதுவாக பாதுகாப்பு விடயங்களை கவனிப்பதற்கென சர்வதேச கிரிக்கட் கவுன்சிலால் நியமிக்கப்பட்டவர்கள் இருக்கின்றனர்.

பாதுகாப்பு கேள்விக்குறியாகும் என அவர்கள் அறிக்கை தரும் பட்சத்தில் அது குறித்து முடிவெடுக்கப்படும் என ஐ.சி.சி. தலைமை நிர்வாகி மால்கம் எஸ்பீட் தெரிவித்தார். (ம-5)

## தடகள போட்டி

யாழ்ப்பாணம்,ஜன.31

யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கம் நடத்தும் தடகளப் போட்டிகள நாளையும் நாளைமறுதினமும் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் பங்குபற்றுவதற்கு விண்ணப்பித்து இதுவரை தமக்குரிய இலக்கங்களைப் பெற்றுக் கொள்ளாத வீர, வீராங்கனைகள் ஆரம்ப தினத்தன்று மைதானத்தில் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். மாவட்ட மெய்வல்லுநர் சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார். (-5)

# மரண அறிவித்தல்கள்

## சிவகுரு ஆனந்தராசா

*(ஓய்வுபெற்ற ஆசிரியர், இமையாணன், உடுப்பிட்டி)*

இமையாணன், அல்வாய் வீதி, உடுப்பிட்டியை பிறப்பிடமாகவும் அரசடி ஒழுங்கை, இல.11, தட்டாதெருவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு ஆனந்தராசா நேற்று (30.01.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சிவகுரு - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் இளைய மகனும் சரசுவதியின் அன்புக் கணவரும் சந்திரமோகன், நந்தகுமார், கிருஷ்ணகுமாரி ஆகியோரின் தகப்பனாரும் காலஞ்சென்றவர்களான நாகரத்தினம், நாகேந்திரம் மற்றும் நாகம்மா, திருமதி இராசலட்சுமி ஆகியோரின் சகோதரரும் சச்சிதானந்தம் (இலங்கை வங்கி, மேற்றரக் கிளை), ரதி ஆகியோரின் மாமனாரும் தர்சிகா, கோபிநாத், பானுரேகா, பிரதீப், வசீகரன் ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் மாணிக்கவாசகர் ஆகியோரின் மைத்துனரும் அக்சயாவின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (31.1.2003) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2மணியளவில் கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.11, அரசடி ஒழுங்கை,*
*தட்டாதெரு, வண்ணார்பண்ணை மேற்கு,*
*யாழ்ப்பாணம்.* (13906)

தகவல்:
ந.சச்சிதானந்தம்
(மருமகன்.)

## திருமதி கணபதிப்பிள்ளை பாக்கியம்

கட்டப்பிராயை பிறப்பிடமாகவும் நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை பாக்கியம் நேற்று (30.01.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் மற்றும் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை (முன்னாள் வாகனத் திருத்துநர், மன்னார்ச் சாலை), சேதுப்பிள்ளை (பறுவதம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் குணலட்சுமி லோகநாதன், நித்தியலட்சுமி, நவரட்ணம்(கண்ணன்-கனடா), வரதலட்சுமி (வாசுகி - கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் சுந்தரலிங்கம் (கல்வியங்காடு), சத்தியதேவி (நாவற்குழி), பஞ்சாச்சரம் (வன்னேரிக்குளம்), பவானி (கனடா), ஜீவா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.02.2003 ஞாயிற்றுக்கிழமை காலை 9மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நீர்வேலி தெற்கு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வீரபத்திரர் கோவிலடி,*
*நீர்வேலி தெற்கு, நீர்வேலி.* (13907)

தகவல்:
க.கணபதிப்பிள்ளை (கணவர்)

## நேர்முகத்தேர்வு

திருமறைக் கலாமன்றத்தினால் நடத்தப்பட்டு வரும் கவின்கலைகள் பயிலகத்தில் நுண்கலைகள் பயில்வதற்கு இந்த வருடம் விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகத்தேர்வு நாளையும்நாளை மறுதினமும் மன்ற கலைத்தூது மணிமண்டபத்தில் நடைபெறும்.

நாளை காலை 8.30மணி - பரதம், 10.30 மணி - வாய்ப்பாட்டு,11மணி - கதகளி, பிற்பகல் 2மணி - மிருதங்கம், 2.30மணி - சித்திரம், 4மணி -வயலின், திருமறை நாளைமறுதினம் பிற்பகல் 2மணி - ஓர்கன், 3 மணி - புல்லாங்குழல், 4மணி - வீணை. (எ-4)

## தொழில் உபகரணம் அன்பளிப்பு

காரைநகர்,ஜன,31

பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினால் காரைநகர் மத்தி கிராம சேவையாளர் பிரிவில் மீளக்குடி யமர்ந்துள்ள தொழிலாளர்களுக்கு தொழில் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

24பேருக்கு மீன்பிடி வலைகளும், கடற்தொழில் உபகரணங்களும், 7 பேருக்கு மேசன் தொழில் உபகரணங்களும் , 2பேருக்கு தச்சுத்தொழில உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன. (எ-73)

## கண்காட்சி ஒத்திவைப்பு

வலி.வடக்கு பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையத்தினால் இன்று வெள்ளிக்கிழமை நடத்தப்படவிருந்த தையல், மனையியல் கண்காட்சி தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 6 ஆம் திகதி வியாழக்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அன்றையதினம் கண்காட்சியை மேலதிக அரச அதிபர் திருமதி பதிலகநாயகம்போல் திறந்துவைப்பார். (ஒ-8)

## வாழ்த்து அட்டை தயாரிக்கும் போட்டி

யாழ்ப்பாணம்,ஜன.31

சமாதானம் தொடர்பான சிந்தனை நாள் வாழ்த்து அட்டை தயாரிக்கும் போட்டி ஒன்றை இலங்கை சாரணியர் சங்கத்தின் யாழ்.கிளை நாளை சனிக்கிழமை முற்பகல் 9மணிக்கு வேம்படி மகளிர் கல்லூரியில் நடத்த இருக்கிறது.

இந்தப்போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் நேரில் சமுகமளிக்கலாம் என்று யாழ்.மாவட்ட ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ஐ-3)

## சேவைநலன் பாராட்டு

கடந்த 28 ஆண்டுகளாக இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியில் உபஅதிபர், அதிபர் பதவிகளை வகித்து தற்போது புனித பத்திரிசியார் கல்லூரியின் அதிபராகப் பதவியேற்றுள்ள அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாரின் நீண்ட காலசேவையைப் பாராட்டி நன்றி தெரிவிக்கும் முகமாக .பிரிவுபசார விழாவொன்று நாளை காலை 9 மணிக்கு இளவாலை புனித ஹெனறியரசர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி சமூகமும் பழைய மாணவர் சங்கமும் இணைந்து இந்நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளன.

# இலவச மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,ஜன.31

தீவக லயன்ஸ் கழகம் கியூமெடிக்கா அமைப்பின் ஆதரவுடன் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மண்டைதீவு 8ஆம் வட்டாரம் ராமன் கடைக்கு அருகில் இலவச மருத்துவமுகாம் நடத்தப்படவுள்ளது.

வெளியிடங்களில் இருந்து வந்து இப்பகுதியில் மீளக்குடியமர்ந்துவரும் குடும்பங்களின் நன்மைகருதி இந்த மருத்துவ முகாம் நடத்தப்படவுள்ளது. இனிவரும் காலங்களில் மாதத்தின் ஒவ்வொரு கடைசி வெள்ளிக்கிழமைகளிலும் இந்த மருத்துவ முகாம் நடத்தப்படும் என்று தீவக லயன்ஸ் கழகத் தலைவர் லயன். ப.தேவநாயகம் தெரிவித்தார். (ம)


## காணி தேவை

கோண்டாவிலில் இயங்கும் தாயகம் சிறுவர் இல்லத்தை விஸ்தரிக்கும் நோக்குடன் இராசபாதையை அண்மித்து 30 - 40 பரப்பு காணி தேவைப்படுவதால் விற்க விரும்புபவர்கள் கீழ்க்கண்ட முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.

சிறிஅமலா ஜுவலர்ஸ்

74/1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

T.P. No. : 0777730567

(C/26293)


## கண்ணீர் அஞ்சலி

எமது சக அலுவலர் திரு.நடராஜா சர்வேஸ்வரன்
(பிரதி திட்டமிடல் பணிப்பாளர் அலுவலகம்)
அவர்களின் அன்புத் தந்தையார்

### ஆறுமுகம் நடராஜா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

மாவட்டச் செயலகம்,
யாழ்ப்பாணம். (C/26290)

யாழ்.மாவட்ட செயலக
ஊழியர்களும்,
நலன்புரிக்கழக உறுப்பினர்களும்.

## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தில் பணியாற்றும்

### கந்தையா நடராசா

அவர்கள் காலமான செய்தி அறிந்து மிகவும் துயரமடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

104, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (13915)

பெற்றா எசன்ஸ்
சப்பிளையர்ஸ்

## மரண அறிவித்தல்

### கந்தையா நடராசா

காரைநகர், பாலாவோடையைப் பிறப்பிடமாகவும் 169,நாவலர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நடராசா நேற்று (30.01.2003) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கந்தையா - சின்னம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும், ஆறுமுகம் - பாக்கியம் தம்பதிகளின் அன்பு மருமகனும், இராசலட்சுமியின் அன்புக் கணவரும், ரஞ்சனாதேவி, கேதீஸ்வரன்(கொழும்பு), சோதீஸ்வரன் (அம்பிகை களஞ்சியம், காசாளர்), தர்மேஸ்வரன் (துபாற்கநதோர், காரைநகர்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் காலஞ்சென்றவர்களான குமாரசாமி வேலுப்பிள்ளை ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.01.2003) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

169,நாவலர்வீதி,
யாழ்ப்பாணம். (13913)

தகவல்:
ந.இராசலட்சுமி
(மனைவி)


ராஜா யாழ்ப்பாணம்.

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு

விஜய், ஸ்நேகா, அரவேல், மனிவண்ணன்

வசீகரா

காட்சிநேரம்: 10.30, 2.30, 6.30, 9.30

ரிக்கற்றுக்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.

நிறைஞ்சனாஸ் சங்கானை

இன்று முதல்

M.G.R.. ராதா சலூஜா நடித்த



இதயக்கனி

கா.நே. : 11.00,2.45,6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 மட்டும்

TOMB RAIDER (C/26253)

நாகம்ஸ் சுன்னாகம்.



விஜய், ஈஷாகோபிகா, நிழல்கள்ரவி நடித்த

நெஞ்சினிலே

(சிவ்வல்)

காட்சிகள் தினசரி: 11.00, 5.00, 8.30

சிலதினங்கள் மட்டும் காண்பிக்கப்படும்

(13911)


# மரண அறிவித்தல்கள்

### திருமதி கனகசபாபதி நேசம்

*(வேவி - காரைநகர்)*

காரைநகர், இடைப்பிட்டி கொட்டைப்புலத்தை பிறப்பிடமாகவும் சுன்னாகம் மயிலணியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகசபாபதி நேசம் (வேவி) நேற்று (30.01.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் கனகசபாபதி அவர்களின் அன்பு மனைவியும் திரு. திருமதி ஆறுமுகத்தின் அன்பு மகளும் சியாமளா, சிவரஞ்ஜினி, சிவநந்தவர்மன், சிவநேசன், சிவரஞ்ஜன், சத்தியா ஆகியோரின் அன்புத் தாயாரும், விசுவலிங்கம் (ஓவசியர் குறோமோ அகுறோ சேவிஸ், சுன்னாகம்), சிவயோகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவபாலனின் மாமியாரும், நகுலேஸ்வரி, கமலாதேவி, புஷ்பலதா, சரவணபவான் ஆகியோரின் சிறிய தாயாரும் தவராணி, பாலவசந்தன் ஆகியோரின் மாமியாரும் கீர்த்தன்,டிலக்ஷனா, கிவிதா, நிரஞ்சனா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் மயிலணியில் உள்ள இல்லத்தில் இருந்து தகனக்கிரியைகளுக்காக இன்று (31.01.2003) வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மயிலணி வீதி,
சுன்னாகம். (13912)

தகவல்:
ஆ.விசுவலிங்கம்
(சகோதரர் - இளைப்பாறிய ஓவசியர்)

### வீரவாகு தர்மலிங்கம்

*(முன்னாள் தர்மகர்த்தா, யாழ்.வண்/கொண்டலடி விநாயகர் ஆலயம்)*

நீராவியடியைப் பிறப்பிடமாகவும் தற்போது டென்மார்க்கை வசிப்பிடமாகவும் கொண்ட வீரவாகு தர்மலிங்கம் அவர்கள் நேற்று (30.01.2003) வியாழக்கிழமை டென்மார்க்கில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாக்கியத்தின் அருமைக் கணவரும் புவனேஸ்வரி, தேவபாலன் (Denmark) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பொன்னுத்துரை (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசன திணைக்களம்), சிவராணி (Denmark) ஆகியோரின் மாமனாரும் சந்திரஉதயன் - ஷர்மிழி (Canada), ஷயந்தினி (விஞ்ஞான பீடம், யாழ்.பல்கலைக் கழகம்),சஞ்ஜீபன் (யாழ்.இந்துக் கல்லூரி), ஆதித்தியா, தேனுகா, மதுரிகா (Denmark) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.02.2003) சனிக்கிழமை Denmark இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

35/8, சிவகுருநாதர் வீதி,
யாழ்ப்பாணம். (13903)

தகவல்:
நா.பொன்னுத்துரை (மருமகன்)

### திருமதி இராமநாதன் தங்கராணி

சுதுமலை வடக்கைப் பிறப்பிடமாகவும், உடுவில் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராமநாதன் தங்கராணி நேற்று (30.01.2003) வியாழககிழமை காலமானார்.

அன்னார் இராமநாதனின் அன்பு மனைவியும், பிறேமச்சந்திரா (ரவி, டென்மார்க்), பிறேமமாலினி (இத்தாலி), பிறேமகுமார் (கிரி, நோர்வே), பிரபாகரன், சுபாசினி ஆகியோரின் பாசமிகு தாயாரும், அமுதினி (டென்மார்க்), விஜயகுமார் (இத்தாலி), சுஜீவா (நோர்வே) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்ற நல்லம்மா மற்றும் இராசரத்தினம் (துரைசிங்கம்), காலஞ்சென்ற அருணாசலம் (கிளி) மற்றும் இரத்தினம் (மானிப்பாய்) ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற இராசதுரை மற்றும் வைத்திலிங்கம் (மானிப்பாய்), இராசம்மா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (31.01.2003) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உடுவில் தெற்கு,
மானிப்பாய். (13910)

தகவல்:
இராமநாதன் (கணவர்)
(முன்னாள் உடுவில் 3ஆம் வட்டார
கிராம சேவை அங்கத்தவர்

### அமரசேனாதிபதி குமரகுரு

*(சட்டத்தரணி - காங்கேசன்துறை)*

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காங்கேசன்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட அமரசேனாதிபதி குமரகுரு அவர்கள் நேற்று (30.01.2003) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் மகேஸ்வரிதேவியின் அன்புக் கணவரும், இந்திராதேவி, ரவீந்திரன், ராஜேந்திரன், ஜெயந்திராதேவி, பாலேந்திரன், விஜேந்திராதேவி, மகேந்திரன், செல்வேந்திரன் ஆகியோரின் தகப்பனாரும், அருள்சுந்தரம், பத்மாவதி, அமுதா, Dr.நிமலன், மங்களா, ஸ்ரீரங்ககுமார் ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (2.2.2003) அன்று பி.ப 4 மணிக்கு பொரளை ஏ.பிரெமென்சில் நடைபெற்று, பூதவுடலகனத்தை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஜஸ்மின் தொடர்மாடி,
426/11, 5/7 கே.சிறில்.சி.பெரேரா மாவத்தை,
கொழும்பு - 13.
தொலைபேசி -074 -619617 (C/26291)

கு.செல்வேந்திரன்
(மகன் - சட்டத்தரணி)

## கைத்தொழில் வணிகர் மன்றம், மீசாலை.

## வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் - 2003

இடம் : யா/விக்கினேஸ்வரா மகாவித்தியாலயம், மீசாலை

காலம் : 02.02.2003 ஞாயிறு காலை 10.00 மணி

தலைவர் : திரு.க.வேதநாயகம் அவர்கள்.

மேற்படி கூட்டத்திற்கு எமது பிரதேசத்தில் பிரமுகர்களான விசேட விருந்தினர்கள்.

1) பிரதேச செயலர் தென்மராட்சி.
2) செயலாளர் - நகரசபை, சாவகச்சேரி
3) வைத்திய அதிகாரி - அரசினர் வைத்தியசாலை சாவகச்சேரி
4) அதிபர், யா/விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம், மீசாலை.
5) தலைவர் - வணிகர் மன்றங்களின் ஒன்றியம், தென்மராட்சி
6) எமது மன்றம் நலிவடைந்த நிலையில் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு நல்கிய கிராம உத்தியோகத்தர்களான
   1) திரு.நா.பரமசிவம் அவர்கள்
   2) திரு.சி.கனகரத்தினம் அவர்கள்
   3) திரு.கே.வேலாயுதபிள்ளை அவர்கள்
   4) திரு.எஸ்.யோகராசா அவர்கள்
   5) திரு.பீ.அற்புதஜெயம் அவர்கள்
   6) திரு.கே.குமாரசாமி அவர்கள்
7) சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி அரசியல்துறை பொறுப்பாளரும், பரப்புரைத் துறைப் பொறுப்பாளரும் கலந்துகொண்டு சிறப்பிப்பார்கள்

ஆகவே மன்றிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத கைத்தொழில் வணிகம், தொலைத்தொடர்பு போன்ற இன்னோரன்ன அமைப்புகள் வைத்திருக்கும் உரிமையாளர்கள் அனைவரும் தமது நிலையங்களை நிகழ்வு நேரத்திற்கு முன் மூடி, குறித்த நேரத்திற்கு சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படுகின்றீர்கள்.

ஆகவே சகல உறுப்பினர்களும் தவறாது சமுகம் தரவும்.

க.வேதநாயகன்
தலைவர்

(C/26292)

# கரும்புலிகள் படைப்பிரிவை புலிகள் பலப்படுத்துகின்றனர்

## சந்தேகம் தெரிவிக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர்

கொழும்பு,ஜன.31

மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் மீறப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகள் படைக்கு ஆள்களைத் திரட்டுகின்றனர். புலிகளின் தற்கொலைப் படைப்பிரிவு கலைக்கப்படவில்லை. அதனை மேலும் புலிகள் பலப்படுத்தியிருக்கின்றார்கள். இதனைக் கலைப்பதற்கான வேண்டுகோளாவது அரசினால் விடுக்கப்படவில்லை. அவர்களது கனரக ஆயுதங்களைக் காட்சிக்கு வைக்கின்றனர்.

இவ்வாறான செயல்களை சமாதானத்திற்கு அனுகூலமான விடயங்களென நாம் கருதிவிட முடியாது. அவர்களது தேவைகளுக்காக அரசைப் பயன்படுத்தும் நிலையே உருவாகியுள்ளது. இதனை நாம் அசட்டை செய்துவிடக் கூடாது.

- இவ்வாறு கூறினார் எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ.

ஒஸ்லோ சமாதானப் பேச்சுக்கள் தொடர்பான பிரதமரின் அறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒஸ்லோ பேச்சுக்களின்போது அந்த மாநாட்டின் வாயிலாகப் பெரும நிதியுதவி கிட்டுமெனப் பேசப்பட்டது. எட்டரைக் கோடி அமெரிக்க டொலர்களே உதவியாகக் கிட்டியது. நாம் எண்ணிய பெறுபேறுகள் எமக்குக் கிட்டவில்லை.

நாம் ஏற்கனவே பெற்ற கடன் உதவிகள் மூலமே நாட்டின் நிதித் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன.

கிழக்குப் பகுதியில் பூரண அமைதி நிலவுவதாக இல்லை. விடுதலைப் புலிகள் வரி அறவிடுகின்றனர். அங்குள்ள 272 பௌத்த தலங்களில் பெரும்பாலானவை யுத்தத்தால் அழிக்கப்பட்டுள்ளன. அங்கு வாழும் தமிழ், முஸ்லிம் மக்களின் புனர்வாழ்வில் கவனம் செலுத்துவதோடு ஆலயங்களும் புனரமைக்கப்பட வேண்டும்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மோதல் தவிர்ப்பு ஏற்பட்டு ஒரு வருடம் கடந்து விட்டது. இதன் பிரதிபலன்கள் வடக்கு - கிழக்கு மக்களின் அன்றாட வாழ்க்கையில் பாரிய மாற்றங்கள் எவற்றையும் ஏற்படுத்தி விடவில்லை.

அண்மையில் மேற்கொண்ட யாழ்.விஜயத்தின்போது இதனை என்னால் நேரில் காணக்கூடியதாக இருந்தது. புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகளுக்கென அமைச்சர் ஒருவர் இருப்பினும் பணிகள் முறையாக மேற்கொள்ளப்படவில்லை. யுத்தத்தின் வடுக்கள் இன்றும் அப்பகுதிகளில் மறைந்ததாக இல்லை.

சமாதான முன்னெடுப்புக்களை ஜனாதிபதியும், பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் வரவேற்கிறார்கள்.

பேச்சுக்கள் எவ்வாறு முன்கொண்டு செல்லப்படுகின்றன என்பதில் தெளிவற்ற தன்மையே காணப்படுகிறது - என்றார் அவர். (ஐ)

# காணாமற் போனோரைத் தேடுவதற்கு இவ்வாண்டு செஞ்சிலுவை முன்னுரிமை

கொழும்பு,ஜன.31

காணாமற்போனவர்களைத் தேடும் பணிகளுக்கு இவ்வாண்டில் முன்னுரிமை வழங்கப்படுமென செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு தெரிவித்திருக்கிறது. அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சர்வதேச மனித உரிமைச் சட்டங்களை போர்நிறுத்த காலத்தில் மதித்து நடக்கின்றனரா என்பதையும் இக்குழு கண்காணிக்கவிருக்கிறது.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் மட்டக்களப்பு பிரதிநிதியான டேனியல் ரோபோவிஸ்ஸி மட்டக்களப்பு அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பின்போது இத்தகவலைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

அரசும் விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து போர்நிறுத்தத்தைக் கடைப்பிடிப்பதால் மனிதாபிமானப் பணிகளை நாம் நிறுத்தியிருக்கிறோம். போர் நடைபெறும் பகுதிகளிலேயே நாம் மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்வோம். போக்குவரத்து வசதிகளற்ற இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கான நடமாடும் மருத்துவசேவை, நோயாளரைக் கொண்டு செல்லும் சேவைகள் உட்பட சில சேவைகளை நிறுத்தியிருக்கிறோம்.

சமாதானச் சூழலை அடுத்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கான போக்குவரத்துச் சேவை சீரடைந்திருக்கின்றது. சுகாதாரச் சேவை ஊழியர்கள் கட்டுப்பாடின்றி அங்கு செல்லமுடியும். எனவே, செஞ்சிலுவைச் சங்கத்தின் பணி தேவையில்லையென நாம் கருதுகிறோம்.

- இவ்வாறு அவர் சொன்னார்.

எனினும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இச்சேவைகள் சீராக மேற்கொள்ளப்படுவதில்லையென அவரிடம் சுட்டிக்காட்டப்பட்டது. அப்பொழுது யுத்தம் நடைபெறாத பகுதிகளில் மருத்துவச் சேவையை வழங்குவது நாட்டின் சுகாதார சேவையினரின் பொறுப்பாகும் என்றும் அவர் பதிலளித்தார். (ஐ)

NEW SCIENCE COLLEGE
JAFFNA
2005 A/L
பௌதிகவியல்
பொறியியல்
M.கருணாநிதி
MON., WED. - 5.00 - 6.00
ஆரம்பம் - 03.02.2003

## மனிதநேய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பற்றுகின்றனர். இக்கூட்டத்தில் வைத்து உத்தியோகபூர்வ அழைப்பு அந்த அமைப்பின் பிரதிநிதிகளிடம் விடுக்கப் படும் எனத் தெரிகிறது.

பளை, கிளிநொச்சி, ஆனையிறவு பகுதிகளில் படையினர் புதைத்த கண்ணிகள் மற்றும் மிதிவெடிகள் சம்பந்தமாக படைத்தரப்பின் வரைபடங்கள் மனிதநேய கண்ணி அகற்றும் அமைப்பினரிடம் கையளிக்கப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ-3)

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விட்டார்.

இலங்கைக் கடலில் மீன் பிடித்தமைக்காக ஏற்கனவே கைது செய்யப்பட்டு யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட ஒருவரும் இவர்களில அடங்குவார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவின் பணி ஆரோக்கியமானதாக உள்ளது என்று மனித உரிமைகள் கண்காணிப்பு ஆய்வு இணைப்பாளர் மேரிவியாகம் தெரிவித்தார்.

கண்ணிகளை ஒழிக்கும் ஒட்டாவா உடன்பாட்டில் இதுவரை இலங்கை கைச்சாத்திடவில்லை என்றும் - இலங்கையை அதில் கைச்சாத்திட வைக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது என்றும் - அவர் சொன்னார். (ஐ-3)

தென்னிந்தியாவில் இருந்து



முதல்முறையாக யாழ்ப்பாணம் என்னும் புண்ணிய பூமிக்கு வருகைதந்துள்ள பரம்பரை சோதிடக் கலையில் புகழ்பெற்ற சிவபால ஜோதிடர்
ராஜகுருசாமி அவர்கள்
★ கைரேகை ★ ஜாதகம் ★ எண்கணிதம்
★ பெயர்ராசி ★ திருமணப்பொருத்தம்
இவற்றில் பலவருட அனுபவமும் புகழும் பெற்றவர்.
ராஜகுருசாமி
மிலன்ஸ் டீலரி கொம்பிளக்ஸ்
60/1 (112), TEMPLE ROAD [Near ICRC], JAFFNA. (13883)

## டக்ளஸும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராட்சி சபைகளின் நிலைபற்றி எடுத்து ஆராயப்பட்டது. மட்டக்களப்பு மாநகர சபை, திருகோணமலை, வவுனியா நகரசபைகள் உட்பட பல உள்ளூராட்சி அமைப்புகள் நீண்ட காலமாக ஆணையாளர்களால் நிர்வகிக்கப்படுகின்றமை குறித்தும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் எதிர்வரும் மாதத்தில் நிறைவடைவது குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டது. ஆதலால் இச்சபைகளுக்கு மக்கள் தத்தம் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்கு ஏற்ற வகையில் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமென இருவரும் கூட்டாக வலியுறுத்தினர்.

இச்சந்திப்பின்போது எந்தக் கட்டத்திலும் அமைச்சர் மகேஸ்வரன் பங்குகொள்ளவில்லை என்பதும், எத்தகைய கோரிக்கைகளையும் முன்வைக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் அமைச்சர் மகேஸ்வரன் அவர்கள், பிரதமர் ரணில் மீது அதிருப்தியுற்றிருப்பதாகத் தெரிவித்த நீண்ட கடிதமொன்றை அனுப்பியதாகவும், அக்கடிதத்திற்கு சாதகமான பதில் கிடைக்கும்வரை பிரதமரைச் சந்திப்பதை தவிர்த்து வருவதாகவும் தகவல்கள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் அமைச்சர் மகேஸ்வரன் பிரதமரிடம் நேரில் கோரிக்கை முன்வைத்ததாகவும் அதனை பிரதமர் ஏற்றுக்கொண்டு செயற்பட முன்வந்துள்ளதாகவும் கூறப்படுவது முற்றிலும் உண்மைக்கு புறம்பானதாகும்.

இவ்வாறு ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, புளொட் தலைவர் த.சித்தார்த்தன் ஆகியோர் கூட்டாக விடுத்த அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளனர் - என்றுள்ளது.

***ஆசிரிய குறிப்பு:-***

இந்த அறிக்கை தொடர்பாக பின்வரும் விடயங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

1."சம்பந்தப்பட்ட சபைகளின் பத

GRADE 6
ENGLISH MEDIUM CLASSES
DATE: FEB. 10th
TIME: 4.30 p.m.
I.B.S. CHUNDIKULI, & NALLUR.
(13870)

## மாநகரசபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளராகக் கடமையாற்றும் இரவீந்திரன் என்பவரின் சேவை நீடிப்பு விவகாரம் அடுத்ததாக சபையில் அமளிதுமளியை ஏற்படுத்தியது. இதனால் கூட்ட நடவடிக்கைகள் குழம்பின. ஒரு கட்டத்தில் கூட்டணியின் உறுப்பினர் தங்க.முகுந்தன் முதல்வரின் ஆசனம் வரை சென்று முதல்வரை கடுமையாக விமர்சித்துவிட்டு சபையிலிருந்து வெளியேறினார்.

மாநகர சபைத் தேவைக்காக இரண்டு உழவு இயந்திரங்களை வாங்க செய்யப்பட்ட ஒப்பந்தம் பற்றிய விடயம் அடுத்து சூடுகிளப்பியது. கடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கு புறம்பாக உழவு இயந்திரத்தை வாங்க மாநகர சபை முதல்வரும், நிர்வாகமும் வேறு ஒரு நிறுவனத்திடம் ஒப்பந்தம் செய்ததாக குற்றச்சாட்டு கிளப்பப்பட்டது. இதனாலும் சபை நடவடிக்கைகள் குழப்பமடைந்தன.

உழவு இயந்திரம் வாங்கும் விடயத்தில் மேயர் செல்லன் கந்தையன் விடாப்பிடியாக நின்றார். இன்றேல் பதவி விலகுவதாக அறிவித்தார்.

இந்த விவகாரங்கள் ஏற்படுத்திய குழப்பங்கள் காரணமாக சபைக் கூட்டம் பெப்ரவரி 3 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ஐ-5-1

## அரசு - புலிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

துக்கு பின்வரும் விடயங்களையும் சிபார்சு செய்வதென நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

போர்நிறுத்த உடன்படிக்கை பற்றிய முறைப்பாடுகள், மீறல்கள் ஆகியவற்றுக்கு உடனடித் தீர்வு காண்பதற்காக அரசு, புலிகள் பிரதிநிதிகள் பத்து நாள்களுக்கு ஒரு தடவை கூடுவது அவசியமானால் அடிக்கடி கூடிப் பேசுவது. இக்கூட்டங்களுக்கு கண்காணிப்புக் குழுவினர் தலைமை வகிப்பர். சிறுவர் ஆள்திரட்டல் பற்றிய குற்றச்சாட்டுகளைக் கையாள்வதற்காக புலிகள் இயக்கத்தில் சேர்ந்த பிள்ளைகளின் பெற்றோர்களும், புலிகளின் மாவட்ட தலைவர்களும், கண்காணிப்புக் குழுவினருக்குமிடையே கூட்டங்கள் நடைபெற வேண்டுமென விடுதலைப் புலிகள் யோசனை தெரிவித்திருக்கின்றனர். தமது இயக்க உறுப்பினர்களால் வயதில் குறைந்தவர்கள் திரட்டப்பட்ட சம்பவங்கள் குறித்து புலிகள் இயக்கத்துக்கு அறியக்கிடைத்தால் அதை நிவர்த்தி செய்ய உடனடியாக புலிகளின் தலைவர்கள் நடவடிக்கை எடுப்பார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது.

புலிகளின் அரசியல், இராணுவத் துறை உறுப்பினர்களுக்கு மனித உரிமைகள் விடயங்களில் [illegible] கருத்தரங்குகளையும், பயிற்சிகளையும் நடத்துவது பற்றிய யோசனைகளை புலிகளின் பிரதிநிதிகள் முன்வைத்தனர்.

ஐசிஆர்சி, யுஎன்எச்சிஆர், யுனிசெவ் போன்ற அமைப்புக்களின் ஒத்துழைப்புடன் அவ்வாறான பயிற்சி நிகழ்வுகளை ஒழுங்கு செய்யுமாறு விடுதலைப் புலிகள் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரைக் கோருவர்.

போர்நிறுத்த உடன்படிக்கையை வலுப்படுத்துவது தொடர்பாக ஏற்பாடு செய்யப்பட்ட மாதாந்தக் கூட்டங்களின் வரிசையில் இக்கூட்டம் முதலாவது கூட்டமாகும். (ஐ-3-

## சித்தார்த்தனும்...

விக்காலம் எதிர்வரும் மாதத்தில் நிறைவடைவது சுட்டிக்காட்டப்பட்டது. ஆதலால், இச்சபைகளுக்கு மக்கள் தத்தமது பிரதிநிதிகளைத் தெரிவுசெய்வதற்கு ஏற்ற வகையில் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென இருவரும் கூட்டாக 'வலியுறுத்தினர்"- என்று ஈபிடிபி அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஆனால், "யாழ்குடாநாட்டில் தெரிவு செய்யப்பட்டுள்ள 17 உள்ளூராட்சி சபைகளினதும் பதவிக்காலத்தை நீடித்தல்" - என்று தலைப்பிட்டு முக்கிய ஆவணமொன்றை டக்ளஸ், சித்தார்த்தன் இருவரும் இச்சந்திப்பின்போது பிரதமரிடம் கையளித்து, அதை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்குமாறு வற்புறுத்தினர் என்பதை உறுதி செய்ய முடிந்தது.

இந்தப் பதவிகால நீடிப்புக்கு வகை செய்யும் சட்டத்திருத்தங்களுக்கான சட்டவரைவின் விவரமும் அந்த ஆவணத்தில் இடம்பெற்றிருந்தது.

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்துக்கான திருத்தம், மாநகரசபைச் சட்டத்துக்கான திருத்தம், நகர சபைகள் சட்டத்துக்கான திருத்தம் ஆகியவற்றையே சட்ட திருத்த வரைபாக அவர்கள் குறிப்பிட்டிருந்தனர்.

இந்த மூன்று திருத்தங்களும் நாடாளுமன்றத்துக்கு அவசர சட்ட வரைவுகளாகச் சமர்ப்பிக்கப்படவேண்டுமென ஈபிடிபியும், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியும் (புளொட்டின் அரசியல் பிரிவும்) கோருவதாகவும் அந்த ஆவணத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இத்தகைய ஆவணத்தை பிரதமரிடம் சமர்ப்பித்தவர்கள் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலத்தை நீடிக்கத் தாங்கள் கோரினர் என்பது குறித்து இப்போது வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர்கள் மூச்சே விடவில்லை மறைத்துள்ளனர்.

2.நாடாளுமன்றக் கட்டடத்தில் உள்ள பிரதமரின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் டக்ளஸ் தேவானந்தாவும் சித்தார்த்தனும் இருந்த அதே சமயத்தில் அந்த அலுவலகத்துக்குள் அமைச்சர் மகேஸ்வரனும் இருந்தமையும், பிரதமரும் மகேஸ்வரனும் யாழ் உள்ளூராட்சிச்சபைகள் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்துக் கலந்துரையாடியதையும் உதயனால் ஊர்ஜிதப்படுத்த முடிந்துள்ளது.


இலங்கை இராணுவத்தின் துணைப் படை என்ற பெயரில் ஈபிடிபிக்கு பல மில்லியன் ரூபாவை மாதாந்தம் அரசு வழங்கி வருவதை இந்த [illegible] தப்பிலும் அமைச்சர் மகேஸ்வரன் [illegible] மையாகச் சாடி, அதற்கு எதிர்ப்பு [illegible] வித்தார் என்பதையும் அறிய முடிந்தது.

3."அமைச்சர் மகேஸ்வரனின் கோரிக்கையை பிரதமர் ஏற்றுக்கொண்டு செயற்பட முன்வந்துள்ளதாக கூறப்படுவது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது" என்று டக்ளஸும் சித்தார்த்தனும் குறிப்பிட்டுள்ளனர்.

ஆனால்,

அமைச்சர் மகேஸ்வரன் குறிப்பிட்டது போன்று சம்பந்தப்பட்ட சபைகளின் பதவிக்காலம் பெப்ரவரி 10இன் காலாவதியானதும் விசேட ஆணையாளர்களின் நிர்வாகத்தின்கீழ் அவற்றை ஒப்படைக்கும் முடிவிலேயே பிரதமர் இப்போது இருக்கிறார் என்பதையும் அறியமுடிந்தது. (ஆ-ர்)

இந்திய சாஸ்திரியார் வருகை



முதன்முறையாக யாழ்ப்பாணப் புண்ணிய பூமிக்கு வருகை தந்துள்ளார். பரம்பரைஜோதிடர் புகழ் பெற்ற
S.N குமாரசாமி அவர்கள்
கைரேகை, ஜாதகம், எண்கணிதம் மற்றும் திருமணத் தடை, தொழில் முன்னேற்றம் இன்மை மற்றும் எந்தப் பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.
(காலை 8மணிமுதல் மாலை 8மணி வரை)
திரு. S.N.குமாரசாமி
ஸ்ரான்லி லொட்ஜ்
இல:711, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.01.2003இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.